www.eelamview.com

விடுதலைப்புலிகள்

குரல் 98 மாசி — பங்குனி 2001 அன்பளிப்பு 5/—

# புலிகளின் சமாதானச்செயற்பாடுகள் அரசின் போர்நடவடிக்கைகள் பேச்சுவார்த்தைக்கு வாய்ப்புகள் உண்டா?



இனப்போர்காரணமாக இலங்கைத்தீவை உருக்குலைத்துவரும் இரத்தக்களரியை நிறுத்துவதற்காக, போரிடும் இருதரப்பும் யுத்தத்தை நிறுத்தி, அமைதிச்சூழலை உருவாக்கி, பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சனைக்கு அரசியல்தீர்வு காண முயலவேண்டும் என்று சர்வதேச சமூகம் விடாது வலியுறுத்திவருகின்றது.

சர்வதேசத்தின் குரலுக்கு மதிப்பளித்து சமாதானத்திற்கான ஒரு வாய்ப்பை உருவாக்க புலிகள்இயக்கம் தீர்மானித்தது.

சிங்கள அரசுக்கும், புலிகள் இயக்கத்திற்குமிடையே பேச்சுவார்த்தையை ஏற்பாடுசெய்யமுயலும் மூன்றாந்தரப்புநாடான நோர்வேயின் சிறப்புத்தூதர் எரிக்சோல்கெயிம் அவர்கள் கடந்த நவம்பர் 1ம் திகதி வன்னிவந்து, தலைவர் பிரபாகரனைச் சந்தித்திருந்தார்.

சமாதானத்திற்கான நம்பிக்கையை ஏற்படுத்திய வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த அந்தச் சந்திப்பில் தமிழரது தேசிய இனப் பிரச்சனையின் பரிணாமவளர்ச்சியை தலைவர் அவர்கள் தெளிவாக விளக்கியிருந்தார்.

'தமிழினத்தின் அழிவின்தான் இலங்கை இனப்போரின் தீர்வு உள்ளது' என்ற பேரினவாதத்தின் அரசியல் நிலைப்பாட்டையும் சுட்டிக் காட்டியிருந்தார். அத்துடன், 'சமாதானத்திற்கான போர்' என்ற பெயரில் சந்திரிகா அரசாங்கம் நடாத்திவரும் இன அழிப்பு முயற்சிகளையும் எடுத்துரைத்திருந்தார். அமைதிவழியில் தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்கு 'சிங்கள அரசு' ஒரு அரசியல் தீர்வு காண நேர்மையுடனும்- உண்மையுடனும் உளமுக்கமுன்வராது என்ற யதார்த்தத்தையும் தலைவர் அவர்கள் எடுத்துவிளக்கியிருந்தார்;

எனினும், இன்றைய சர்வதேச சூழலில், இலங்கைத்தீவின் இனப்போருக்கு அமைதிவழியில் தீர்வு காணப்படவேண்டும் என்ற உலக சமூகத்தின் விருப்பத்திற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்க புலிகள் இயக்கம் தயாராக உள்ளது என சோல்கெயிம் அவர்களிடம் தலைவர் பிரபாகரன் உறுதியளித்திருந்தார்.

பரஸ்பர நல்லெண்ணசூழலை ஏற்படுத்துவதற்கு ஏதுவாகவும், புலிகளின் சமாதான விருப்பை சிங்கள அரசுக்கு உணர்த்து முகமாகவும், தாக்குதல் நடவடிக்கைகளை தணிப்பதாகவும், அச்சந்திப்பில், தலைவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அந்தச் சந்திப்பிற்குப் பின்னர் நவம்பர் 27 மாவீரர்நாள் செய்தியில் தலைவர் அவர்கள் தனது சமாதான நல்லெண்ணத்தை மீண்டும் வெளிப்படுத்தியிருந்தார். சிங்கள அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தத் தயாராக இருப்பதாகவும் அறிவித்திருந்தார்;

மீண்டும் ஒரு மாதம் கழித்து, சமாதான வாய்ப்பிற்குச் செயல்வடிவம் கொடுக்கும் எண்ணத்துடன் டிச 24 ம் திகதி ஒரு தலைப்பட்சமாக போர்நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தி, பேச்சுவார்த்தைக்கான நம்பிக்கையை பிரகாசம் அடையச் செய்வித்தார். ஒரு மாத வரையறையைக் கொண்டிருந்த அப்போர் நிறுத்தத்தை இது வரை மூன்று தடவைகள் நீடித்து சமாதான வாய்ப்பிற்கு உயிர் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்.

இந்த நான்கு மாத போர்நிறுத்த காலத்தில், புலிகள் இயக்கம், மேலும் சில நல்லெண்ண சமிக்ஞைகளை செயலில் காட்டி சமாதான சூழலை உருவாக்குவதற்கான முன் முயற்சிகளில் இடையறாது ஈடுபட்டு வருகின்றது.

தம்மிடம் உள்ள போர்க்கைதிகளில் சிலரை கட்டங்கட்டமாக விடுதலை செய்துள்ளனர். தென் இலங்கையில் இருந்து வந்த சர்வமதக்குழுவினரை வரவேற்று, கலந்துரையாடி புலிகளின் சமாதான நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருந்தனர்.

ஆனால், இவை எவற்றிற்குமே சந்திரிகா அரசாங்கம் செவிசாய்க்கவில்லை புலிகளின் போர் நிறுத்த அறிவிப்புகளை அது தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றது. அத்துடன் போர்நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள புலிவீரர்கள் மீது, போர்தர்மத்திற்கு முரணாகவும், அநாகரிகமான வகையிலும் வலிந்த தாக்குதல்களையும், வான் தாக்குதல்களையும் நிகழ்த்தி புலிகளின் சமாதான முன்னெடுப்புக்களை சீர்குலைக்க முயல்கின்றது.

அரசபடைகளின் இந்த தாக்குதல்களில் 150 போராளிகளை இழந்த நிலையிலும், மோதல் நிலை ஏற்படாமல் தவிர்க்கும் எண்ணத்துடன் தாம் மீட்டநிலப்பரப்பில் ஒரு பகுதியை தாரைவார்த்த நிலையிலும் புலிகள் இயக்கம் பொறுமை காத்து, தாம் ஏற்படுத்தி வரும் சமாதான சூழலை தக்கவைத்தபடி உள்ளனர்.

போர்நிறுத்தம் செய்ய தொடர்ச்சியாக மறுத்துவரும் சிங்கள அரசை சமாதான வழிக்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் 'புரிந்துணர்வுச் செயற்பாடு' என்ற நடைமுறையை வகுத்த நோர்வே அரசு அதை இரு தரப்பினரும் பரிசீலித்து, ஒரு முடிவுக்கு வந்து பகைமை தணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என்று கோரியது. இது தொடர்பான பூர்வாங்க கலந்துரையாடல்களை இரு தரப்பினருடனும் பல வாரங்களாக நடாத்தினர்.

புலிகள் இயக்கத்தின் சார்பில் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நோர்வே பிரதிநிதிகளை லண்டனிலும், நோர்வே தலைநகர் ஒஸ்லோவிலும் பல தடவைகள் சந்தித்து, சமாதான சூழ்நிலையை உருவாக்க சிங்கள அரசு செய்ய வேண்டிய விடயங்களை இனங்காட்டியிருந்தார்.

ஆனால், சமாதானப்பேச்சை நடாத்துவதற்கான ஒரு உகந்த சூழ்நிலையை உருவாக்கும் இலக்கைக் கொண்ட இந்தப் புரிந்

(8ம் பக்கம் பார்க்க)

**உள்ளே**

- ☐ பொங்கு தமிழ் ஈழத் தமிழரின் எழுச்சிக்குரல்
- ☐ அரச பயங்கரவாதத்தின் குறிகாட்டி எங்கள் குழந்தைகளை நோக்கி
- ☐ உள்ளதை உள்ளவாறே உரைக்கின்றோம்
- ☐ அரசு பகிர்ந்து கொள்ள நினைப்பது பரஸ்பர உறவா? பகையா?
- ☐ விழுதுகள் (கரும்புலி மேஜர் சிறிவாணி)
- ☐ வேதனைகளை வெல்லும் பெருமையும் தந்து...
- ☐ உரைக்களம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

www.eelamview.com



# பிரித்தானியாவின் தடையும் பேரினவாதத்தின் சதியும்

பிரித்தானிய அரசு வெளியிட இருந்த பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் புலிகள் இயக்கத்தை உள்ளடக்கக் கூடாது என ஈழத் தமிழர்களும், தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்று பட்டு, ஒரே குரலில் உரத்துக் கூறியிருந்தும் பிரித்தானிய அரசு அதற்குச் செவிசாய்க்கவில்லை.

நீதியானதும், வீரம்செறிந்ததுமான ஒரு விடுதலைப் போராட்டத்தை தலைமையேற்று நடாத்தி வரும் புலிகள் இயக்கத்தை, ஒரு பயங்கரவாத அமைப்பாக முத்திரை குத்தியதன்மூலம், பிரித்தானிய அரசு, ஈழத்தமிழர்களின் உணர்வுகளைக் காயப்படுத்தியுள்ளது.

சிங்கள அரசின் அடக்குமுறைக்கு எதிராக அர்ப்பண உணர்வுடன் போராடியபடி, கடந்த கால் நூற்றாண்டு காலமாக, தமிழீழ மக்களின் பாதுகாப்புக் கவசமாகவும், நம்பிக்கை நட்சத்திரமாகவும் திகழ்ந்துவரும் புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாதக் குழுவாக பிரிட்டன் சித்தரித்திருப்பது தமிழீழமக்களை கடுமையாக வேதனைப் படுத்தியுள்ளது.

அரச அடக்குமுறைக்கெதிராகப் போராடும் புலிகளை பயங்கரவாதிகள் என குற்றம்சாட்டியதன் மூலம் ஒடுக்குமுறையாளர்களான சிங்கள அரசு உலகளாவிய ரீதியில் நியாயப்படுத்தப்பட்ட சிறுமைகண்டு. உலகத்தமிழர்கள், பிரித்தானிய அரசு மீது *விசனம்* தெரிவிக்கின்றனர்.

விடுதலைப் போராட்டங்களையும், மக்கள் புரட்சிகளையும் மனுக்குலத்தின் உன்னதமான அரசியல் நிகழ்ச்சிகளாகவே வரலாறு பதிந்துவைத்திருக்கின்றது. இத்தகைய போராட்டங்களை நசுக்க முயன்றோரை சர்வாதிகாரிகளாகவும், இரத்த வெறிபிடித்த ஆட்சியாளர்களாகவும வரலாறு இனங்காட்டியுள்ளது.

ஆனால், புனிதமான இந்த வரலாற்றுப் போக்கை தலைகீழாக மாற்றியமைக்கும் முயற்சியாகவே பிரித்தானிய அரசின் செயல் அமைந்துள்ளது.

இலங்கைத்தீவில் தமிழர்க்கெதிரான ஒடுக்குமுறை வரலாறு அரசபயங்கரவாதத்துடனேயே ஒன்றறக்கலந்துள்ளது.

தமிழரின் விடுதலைப்போராட்டம் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போர் என்ற பரிணாமத்தைப் பெற முன்னரே நிராயுதபாணிகளாக நின்ற தமிழினம் மீது அரசபயங்கரவாதம் ஏவிவிடப்பட்டது.

தமிழீழத் தேசியத்தைக் கருவிலேயே அழிக்கும் நீண்டகாலத்திட்டத்துடன் தேசிய இனக்கட்டுமானத்தின் அடிப்படைகள் அனைத்தின்மீதும அரச பயங்கரவாதம பாய்ந்தது.

தமிழரின் மொழி, நிலம், பண்பாடு, பொருளாதாரம் தாக்குதலுக்குள்ளானது. தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்

அரச ஒடுக்குமுறைக்கெதிராக அமைதிவழிகளில் தொடுக்கப்பட்ட எதிர்ப்புப போராட்டங்கள் இராணுவப் பலம கொண்டு நசுக்கப்பட்டபோது வேறுவழிகளின்றி ஆயுதப்போராட்டம் பிறப்பெடுத்திருந்தது.

விடுதலைப் புலிகள் தமிழீழ

Liberation Tigers Of TAMIL EELAM

புலிகளின் குரல்

இந்த ஆயுதப்போராட்டத்திற்குத் தலைமை கொடுத்த புலிகள் இயக்கம் விடுதலைப் போரை வீறுடன் நடாத்தியது.

தமிழரின் இராணுவமாக, தமிழினத்தின் பாதுகாப்பு அரணாக புலிகள் இயக்கம வளர்ச்சி பெற்ற பின்னரே, அரசபயங்கரவாதத்துடன் போர்புரிந்தபடி தமிழினம் வாழும் யதார்த்தத்தை உருவாக்கியது.

இலங்கைத்தீவின் வரலாற்றுடன் நன்கு பரிச்சயம் ஆன பிரிட்டன் இந்த அரசபயங்கரவாதத்தின் வரலாற்றைப் புறந்தள்ளிவிட்டு அதற்குப்பதிலாக இனப்படுகொலைக்கெதிரான *சில பதிலடி* நடவடிக்கைகளைப் 'பயங்கரவாதம்' என வரையறுத்து எமது விடுதலை இயக்கத்திற்குச் சேறு பூசி ஒரு வரலாற்றுத்தவறிழைத்துள்ளது.

25 ஆண்டுகளுக்கும் மேலாக ஈழத்தமிழரின் அரசியல் விடுதலைக்காக போராடிவரும் உண்மையான மக்கள் இயக்கமாகிய எமது விடுதலை அமைப்பிற்கு பிரித்தானிய அரசு பயங்கரவாதப் பட்டம் சூட்டியிருப்பது வேதனை தரும் விடயமாக உள்ளது.

இந்த முத்திரை குத்தலால் ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை பிரித்தானிய அரசு கொச்சைப்படுத்தியுள்ளது.

இந்தத் தடை நடவடிக்கைமூலம் பிரித்தானிய அரசு சிங்கள - பௌத்த பேரினவாதத்திற்கே துணைபுரிந்துள்ளது. சிங்களத்தின் போர்வெறிக் கொள்கைக்கு, இராணுவ மமதைக்கு இத்தடை அறிவிப்பு உரமூட்டி, உற்சாகப்படுத்தியுள்ளது.

அத்துடன், "இனப்பிரச்சனை இங்கில்லை, இருப்பது பயங்கரவாதப் பிரச்சனைதான்" என்ற பேரினவாதிகளின் நீண்டகால நிலைப்பாட்டை பிரித்தானிய அரசும் ஆமோதித்ததாக அமைந்துவிட்டது. இவை காரணமாக எமது மக்களது விடுதலைப்போராட்டத்தின் அரசியல் நியாயப்பாடு, உலக அரங்கில் பலவீனப்படுத்தப்படும் ஏது நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இனப்படுகொலை அபாயத்தை எதிர்கொண்டபடியுள்ள எமது மக்களை இது மேலும் சிக்கலானதொரு நிலைமைக்கே தள்ளியுள்ளது.

உலக அரங்கில் புலிகள் இயக்கத்திற்கு அவப்பெயரை உண்டுபண்ணவேண்டும் என்பது பேரினவாதத்தின் சதித்திட்டம். அதன்மூலம் புலிகளின் அதாவது ஈழத்தமிழர்களின அரசியல் இலட்சியத்தை நியாயமற்றதென்றாகத் திரித்துக் காட்டி தமிழரின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க சிங்கள அரசு தீவிரமாகச் செயற்படுகின்றது.

தமிழரான அமைச்சர் கதிர்காமரை இந்தப் பணிக்கு நியமித்த பேரினவாதத்தின் சாணக்கியம் பிரிட்டனிடம் வெற்றிகண்டுள்ளது.

நோர்வே அரசு முன்னெடுத்துள்ள பேச்சுவார்த்தை முயற்சியில் சிங்கள அரச காட்டும் அக்கறையைவிடப்பல்மடங்கு அக்கறையை மற்றைய ஐரோப்பிய நாடுகளிலும் புலிகள் தடை செய்யப்பட வேண்டும் என்று பரப்புரை செய்வதிலேயே காட்டுகின்றது.

பேச்சு அனுசரணையாளர் எரிக்சோல்கெயிமை சந்திக்க ஒதுக்கும் நேரத்தைவிட அதிக நேரத்தை அரசாங்க தலைவர்கள்; ஆயுதவியாபாரிகளையும் இராணுவ ஆலோசகர்களையும் சந்திப்பதிலேயே செலவிடுகின்றனர்.

புலிகளைத் தடைசெய்வதன்மூலம் இலங்கைத்தீவில் போரை நிறுத்தலாம், இரத்தக்களரியைத் தடுக்கலாம் என்றவாறான சிங்கள அரசின் கருத்துடன் பிரிட்டனும் உடன்பட விரும்பினால் அது ஒரு கேலிக்குரிய விடயமாக இருக்கும்.

இனப்போரின் மூலகாரணி சிங்கள, பௌத்த பேரினவாதம். தமிழ் இனப்படுகொலைக்குத் திட்டமிட்டு, அரசியல் தீர்வு முயற்சிகளைக் குழப்பியடித்து, இனப்பிரச்சனைக்கு இராணுவ வழித் தீர்வை திணித்தபடி உள்ளதும் பேரினவாத சக்திகள்தான். இந்தப் பேரினவாத சக்திகளின அதிகாரபீடம்தான் சிங்கள அரசு.

எனவே, போரைத் தொடர்வதா! சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதா! என்று தீர்மானம் எடுப்பது முற்றுமுழுதாகச சிங்கள அரசின் கைகளிலேயே உள்ளது.

அண்மைக்காலமாக போரில் சில பின்னடைவுகளைக் சந்தித்த சிங்கள அரசுக்கு பிரித்தானிய அரசின் தடை அறிவிப்பு அதனது இராணுவத் தீர்வு முயற்சிக்கு புத்தூக்கம் அளித்திருக்கின்றது.

நோர்வேயின் சமாதான முயற்சியை ஏற்பது போலவும் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வுகாண ஆவலாய் உள்ளது போலவும உலகநாடுகளிடம் சிங்கள அரசு கூறிவருகின்றது.

ஆனால், மறுபுறத்தில், ஆயுதங்களை வாங்கும் ஒப்பந்தங்களில் கையெழுத்திடுகின்றது, இராணுவ ஆலோசகர்களை, கூலிக்குலியானங்களை இறக்குமதி செய்கின்றது, பிரதமரைப் பொறுப்பாக நியமித்து படைக்கு ஆட்களையும் சேர்க்கின்றது இவ்விதமாக தனது படைபலத்தையும் சிங்கள அரசு பலப்படுத்துகின்றது.

உண்மையில் உலகசமூகத்தை தந்திரமாக ஏமாற்றிக் கொண்டு ஒரு பெரும் போருக்காக தனது இராணுவ இயந்திரத்தை பலப்படுத்துகின்றது என்பதே உண்மையாகும்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துணர்வு, உடன்பாட்டை 'மனிதாபிமானச் செயற்பாடுகளுக்கான உடன்பாடு' என சிங்கள அரசு பெயர் மாற்றம் செய்துள்ளது. அத்துடன், முன்பு கலந்துரையாடப்பட்ட விடயங்கள, நோர்வே அரசினால் முதலில் தரப்பட்ட வரைபில் உள்ள பல விடயங்களை நீக்கிய சிங்கள அரசு சில விடயங்களை தனக்குச் சார்பானதாக மாற்றியமைத்தும் உள்ளது.

சிங்கள அரசு திருத்திய இந்த வரைபு தொடர்பாக புலிகள் இயக்கத்தின கருத்துக்களைப்பெற்று, உடன்பாட்டை கையெழுத்திடும் நிலைக்கு உயர்த்தும் எண்ணத்துடன் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட்பர்க் அவர்களின் தலைமையிலான குழுவினர் வன்னி வந்தனர்.

புலிகள் இயக்கத்தின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அவர்களின் தலைமையிலான குழுவினர் நோர்வே அரசின் தூதுக்குழுவை 6.4.2001 அன்று சந்தித்து நீண்டதொரு கருத்துப்பரிமாற்றத்தை நடாத்தியிருந்தனர்.

நோர்வே அரசு பெயர்சூட்டி முன்னர் பூர்வாங்க கலந்துரையாடல்களின் போது ஆராயப்பட்ட புரிந்துணர்வு உடன்பாடு என்ற வரைபின் தலைப்பை சிங்கள அரசு மாற்றியதையிட்டு புலிகளின் பிரதிநிதிகள் நோர்வே தூதுக்குழுவிடம் தமது கடுமையான கண்டனத்தை தெரிவித்திருந்தனர். சிங்கள அரசு செய்த பெயர் மாற்றத்தை நிராகரித்த புலிகளின் பிரதிநிதிகள் முன்னைய வரைபின் பிரகாரம் புரிந்துணர்வு உடன்பாடு என்றே இருக்கவேண்டும் என்று நோர்வே தூதுக்குழுவிடம் வலியுறுத்தியிருந்தனர்.

போரில் ஈடுபட்டிருக்கும் தமிழ், சிங்கள தேசிய இனங்களிடையே ஒரு புரிந்துணர்வை உருவாக்கி, போரை நிறுத்தி, ஒரு சமாதான சூழலை ஏற்படுத்தும் இலக்குடனேயே அந்த உடன்பாட்டை நோர்வே அரசு கொண்டு வந்தது. இது ஒரு அரசியல் விடயம். ஆனால் இந்த உண்மையை ஒப்புக்கொள்ள சிஙகள அரசு விரும்பவில்லை. பதிலாக இந்த அரசியல் போரை சிங்களப் படைகளுக்கெதிரான ஆயுத மோதலாக, பயங்கரவாத நடவடிக்கையாக திரித்துக்காட்டி போருக்கான மூலகாரணியான அரசியலை மழுங்கடிக்க சிங்கள அரசு முயல்கின்றது. எனவே தான் அரசியல் அர்த்தம் கொண்டதும், மிகச் சரியானதுமான புரிந்துணர்வு உடன்பாடு என்ற சொற்பதத்தை நீக்கி, மனிதாபிமானச் செயற்பாடுகளுக்கான உடன்பாடு என சிங்கள அரசு பெயர் மாற்றம் செய்ய விரும்புகின்றது சிங்கள அரசின இந்த சதித்திட்டத்தை புலிகள் இயக்கம் அனுமதிக்கமாட்டாது.

இதே வேளை! புலிகளுடன் பேசும் காலம் வந்து விட்டது என்று உலகிற்குக் கூறிக்கொண்டே புலிகள் இயக்கத்தின் மீதும், அதன் தலைமைப்பீடம் மீதும் சேறு பூசுவதிலும், சீண்டுவதிலும் சிஙகள அரசு ஈடுபடுகின்றது இது சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்கக்கூடியது. இத்தகைய சமாதான விரோதப் போக்குகளை உடனடியாக நிறுத்தி, பகைமையைத்தணித்து ஒரு ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்த அரசு முன வரவேண்டும்.

இதற்கு முன்னோடியாக புரிந்துணர்வு உடன்படிக்கையைக் கொண்டு வந்து, போர்நிறுத்தத்தைப்பிரகடனப்படுத்தி, பொருளாதாரத் தடைகளை அகற்றி தமிழ் மக்கள் ஒரு இயல்பு வாழ்க்கைவாழ அரசு அனுமதிக்கவேண்டும் போர் நீங்கி, மக்கள் ஒரு இயல்பு வாழ்க்கை வாழும் ஆரோக்கியமான சூழலில் பேச்சுவார்த்தைகள் நடைபெறவேண்டும. இருபகுதியினர்க்குமிடையேயான பேச்சுவார்த்தைகள் சமத்துவமான வகையில் நடைபெறுவதற்குக் குறுக்காக புலிகள் இயக்கம் மீதான சிங்கள அரசின் தடை உள்ளது. சிங்கள அரசு பேச்சுவார்த்தை மேசையிலும், புலிகள் இயக்கம் குற்றவாளிக் கூண்டிலும் நின்றவாறு பேச்சுவார்த்தைகள் நடைபெறுவது கேலிக்கிடமாக இருக்கும். எனவே புலிகள் இயக்கம்மீதான தடையை அகற்றி தமிழ்மக்களின் சட்டபூர்வ பிரதிநிதிகளாக விடுதலைப்புலிகளை ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலையிலேயே நேரடிப்பேச்சுக்களில் ஈடுபடக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும்.

அரசியல் பேச்சுக்கள் தொடங்குவதற்கு மேற்குறிப்பிட்ட தடைகள் அகற்றப்பட்டு ஒரு உகந்த சூழ் நிலையை, சிங்கள அரசு, ஏற்படுத்தி, சமாதானத்தின்பால்தான் கொண்டுள்ள உறுதியையும்நேர்மையையும் அது நிரூபிக்கவேண்டும்.



www.eelamview.com

www.eelamview.com



# பொங்கு தமிழ் ஈழத்தமிழரின் எழுச்சிக்குரல்

- எல்லாளன் -

சலுகைகள் வழங்கி மக்கள் இனமொன்றின் அரசியல் உரிமைகளைப் பறிக்கலாம் என்று கருதுவது நவீனகால ஆக்கிரமிப்பாளர்களின் பொதுவான நம்பிக்கை.

இந்த அரசியல் நப்பாசை பலித்ததாக வரலாறு இல்லை. ஆயினும், இதை முயற்சித்துப்பார்ப்பதில் அடக்குமுறை அரசுகள் சலிப்படைவதுமில்லை.

ஆக்கிரமிக்கப்பட்ட குடாநாட்டிற்கு மின்சாரவசதிகளை வழங்கி, சொகுசுப் பேருந்துகளை ஓடவிட்டு, தொலைக்காட்சி, சினிமா பார்த்து மகிழ வாய்ப்புகளைக் கொடுத்து, கோவில் திருவிழாக்களையும் இன்னபல களியாட்டங்களையும் நடாத்த அனுமதிப்பதன் வாயிலாக குடாநாட்டு மக்களின் அரசியல் விழிப்புணர்வை மழுங்கடித்து, ஒரு தேசியப்பற்றுஅற்ற மக்கள் கூட்டமாக அவர்களை மாற்றமுடியும் என சிங்கள அரசு நம்பிக்கைகொண்டது.

தம்மைத் தேடிவந்த வசதிகளை மக்கள் பயன்படுத்திக்கொண்டனர். இவற்றை அவதானித்த சிங்கள அரசு "குடாநாட்டு மக்களது மனங்களை தமது சலுகைத்திட்டத்தால் வென்று வருவதாக" எண்ணத் தலைப்பட்டது.

அரச தரப்பின் நம்பிக்கை அதிக நாட்கள் நீடிக்கவில்லை. சிங்களத்தின் நம்பிக்கையைச் சிதறடிக்கும் வகையில், தருணம் பார்த்து, குடாநாட்டின் கல்விச்சமூகம் யாழ் பல்கலைக்கழகத்தின் தலைமையில் தனது சுதந்திர உணர்வைபுலப்படுத்தத்தொடங்கியது.

ஜனவரி, 17, இல் 'பொங்கு தமிழ்' என்ற பெயரில் யாழ்ப்பாணச் சமூகம் தனது அரசியல் விழிப்புணர்வை வெளிப்படுத்தி, தமிழரின் விடுதலைப் போராட்ட அரசியலுக்கு வலுச்சேர்த்துள்ளது.


இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் வாழ்ந்தபடி, அதன் அச்சுறுத்தல்களுக்கும், எச்சரிக்கைகளுக்கும் அடிபணியாது தமிழரின் அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து, எழுச்சிப்போராட்டத்தைத் தலைமையேற்று நடாத்திய யாழ் பல்கலைக்கழகம் காலமறிந்துதனது வரலாற்றுக்கடமையை ஆற்றியுள்ளது.

சலுகை வழங்கி உரிமைபறிக்கச் சதிசெய்த சிங்கள அரசின் பேராசைக்கு பொங்குதமிழ் சாவுமணி அடித்துள்ளது.

இந்த எழுச்சி நிகழ்வில் சிங்கள அரசின் முகத்தில் அறைவது போல ஒரு காட்சிப்பொருளொன்றை பல்கலைக்கழக மாணவர்கள் அமைத்திருந்தனர்.

முட்கம்பிச்சுருள்களால் சுற்றியடைக்கப்பட்ட ஒரு கூட்டிற்குள் தொலைக்காட்சிப்பெட்டி, குளிரூட்டி போன்று சிங்களம் அனுமதித்த சலுகைப்பொருட்களின் வகைமாதிரிகள் வைக்கப்பட்டிருந்தன.

"ஒருசில வசதிகளுடன் கூடிய ஒரு சிறைச்சாலைதான் குடாநாடு" என்ற படிமத்தை இந்தக் காட்சிப் பொருள்மூலம் மாணவர்கள் சிறப்பாக அம்பலப்படுத்தியிருந்தனர்.



குடாநாட்டு மக்களது அரசியல் விழிப்புணர்வை மழுங்கடிக்க தாம் தந்திரோபாயமாகச் செயற்படுவதாக நினைத்துக்கொண்டிருந்த சிங்கள அரசுக்கு சிறைக் கூண்டுப் படிமத்தை வெளிப்படுத்தும் ஒரே ஒரு காட்சிப்பொருள் மூலம் பதிலடி கொடுத்து அதைவிடப் புத்திபூர்வமான வகையில் பல்கலைக்கழக மாணவர்கள் நடந்துகொண்டுள்ளனர்.

அந்த எழுச்சிநிகழ்வின் மூலம் தமிழரின் அரசியல் கோரிக்கைகளான தாயகம், தேசியம், தன்னாட்சி என்பவற்றை மீண்டுமொருமுறை உரத்து எழுப்பி எமது மக்களின் அரசியல் நிலைப்பாட்டை உலகிற்கும் உணர்த்தியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் முகிழ்ந்த பொங்குதமிழ் நிகழ்ச்சி தமிழர் தாயகம் முழுவதிலும் பரவி தமிழ்ஈழ மக்கள் மத்தியில் அரசியல் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழினப்படுகொலையின் கொடூரத்திற்கு அதிகளவில் முகங்கொடுத்துவரும் தென்தமிழீழத்தில் இந்த அரசியல் எழுச்சி பரவாமல் தடுக்க அங்குள்ள இராணுவ நிர்வாகம் பெருமுயற்சி எடுத்திருந்தது.

பல்கலைக்கழகங்களுக்கு, பிரபல கல்லூரிகளுக்கு, மாணவர் அமைப்புகளுக்கு, என எச்சரிக்கை அறிவுறுத்தல்களையும், துண்டுப்பிரசுரங்களையும் இராணுவம் வழங்கியது.

இந்த இராணுவக்கட்டளைகளை மீறினால் தண்டனைகளை அனுபவிக்கத் தயாராய் இருங்கள் என்றும் இராணுவம் மிரட்டியது.

மட்டக்களப்பு, அம்பாறை பிராந்தியத்தில் முன்னர் தாம் செய்த படுகொலைச் சம்பவங்களை துண்டுப்பிரசுரங்கள் மூலம் தமிழ்மக்களுக்கு நினைவூட்டிய படையினர், அவையெல்லாம் தாம் சீண்டப்பட்டதால் அல்லது ஆபத்திற்குள்ளாக்கப்பட்டதால் அல்லது புலிகள் என்று கருதி நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் என எடுத்துக்கூறி, தமது அறிவுறுத்தல்களை செவிமடுக்காதுவிட்டால் இனிமேலும் அதுதான் நடக்கும் என்று மறைமுகமாக எச்சரித்து பொங்குதமிழ் எழுச்சியை நசுக்க முனைந்தனர்.

இந்த மிரட்டல்களுக்கு அடிபணிந்து எழுச்சிப் போராட்டத்தைக் கைவிட மட்டக்களப்புக் கல்விச் சமூகம் மறுத்துவிட்டது. வீதியில் இறங்கி எமது மக்களின் அரசியல் கோரிக்கைகளை உரத்து முழங்க முடிவெடுத்தது.

இராணுவமிரட்டலுக்கு பதிலடி கொடுப்பதுபோல தமிழ்மக்கள் பெருமளவில் கொல்லப்பட்ட ஒரு இடத்தில் இருந்தே இந்த அரசியல் ஆர்ப்பாட்டத்தை நடாத்த விரும்பியது.

1990 இல் வந்தாறுமூலை பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்திருந்த தமிழர்களில் 160 பேர் வரையில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு, பேருந்துகளில் அனைத்துச் செல்லப்பட்டுக், கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டிருந்தனர். அந்த வளாகத்திலேயே பொங்குதமிழ் எழுச்சிப்போராட்டத்தை நடாத்த முடிவெடுத்தனர். இராணுவ அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது பெருமளவில் கலந்துகொண்ட மக்கள் அந்த எழுச்சிப்போராட்டத்தை வெற்றியடைய வைத்தனர்.

இதேபோன்று திருமலை வவுனியா மாவட்டங்களிலும் கல்விச் சமூகத்தின் தலைமையில் எழுச்சிப் போராட்டங்கள் நடந்தேறின. ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் தாயகத்தின் அனைத்து இடங்களிலும் படைப் பயமுறுத்தல்களையும் மீறி, மக்கள் உறுதிகாட்டிப் போராடி, எமது மக்களின் ஒற்றுமை உணர்வை உலகிற்கு புலப்படுத்தியுள்ளனர். ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட வன்னிப்பெருநிலப்பரப்பின் அனைத்துப் பட்டணங்களிலும் ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு பொங்குதமிழ் எழுச்சி நிகழ்விற்கு துணைநின்றனர்.

ஒருபுறம் அற்பசலுகைகளை அனுபவிக்க அனுமதிப்பதும், மறுபுறம், மக்களை இராணுவ அழுத்தத்திற்குள் உழலவிட்டு அவர்களது தேசியப்பற்றையும், போராட்டக் குணாம்சத்தையும் மழுங்கடிக்கவும் முயன்ற சிங்கள அரசின் முகத்தில் எமது மக்கள் கரிபூசியுள்ளனர்.

சலுகைகளின் விளைவான ஆடம்பர நுகர்வுப் பொருட்களைக்கண்டும் தமிழ்மக்கள் ஏமாறவில்லை. அதே வேளை, இராணுவ நெருக்குவாரங்களைக்கண்டு அவர்கள் அடிபணிந்து, பேசாமடந்தைகள் ஆகிவிடவுமில்லை.

உரியதருணத்தில் ஒன்றுபட்டுக் குரல் எழுப்பிய ஈழத்தமிழர்கள் உலகின் கவனத்தையும் எமது போராட்டத்தின்பால் ஈர்த்து, தமிழினத்தின் அரசியல் கோரிக்கைகளையும் வலுப்படுத்தியுள்ளனர்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண சிங்கள அர

([illegible]ம் பக்கம் பார்க்க)





www.eelamview.com

www.eelamview.com



# அரச பயங்கரவாதத்தின் குறிகாட்டி எங்கள் குழந்தைகளை நோக்கி

சிறிய உருவம், ஒளிமங்கிய கண்கள், ஒட்டிய கன்னங்கள், பிரசவித்து முப்பது நாட்களேயான தன் குழந்தையை கைகளில் சுமந்தவாறு அந்த இளந்தாய் கதைக்கத் தொடங்கினாள்.

''நான் நேற்றுத்தான் இஞ்ச வந்தனான்''

ஒவ்வொரு வார்த்தைகளையும் கஸ்ரப்பட்டே அவள் உச்சரித்தாள் கதைக்கும் போது நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பத் தொடங்கின. பலவீனத்தால் கை விரல்கள் நடுங்கின. மேற்கொண்டு வார்த்தைகளைச் சொல்ல அவள் திணறினாள். நலிந்த அவளுடைய குழந்தை கைகளில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தது நான், அவள் கதைப்பதைக் கேட்பதற்காக காத்திருந்தேன். ஆனாலும் அவளால் முடியவில்லை. ஒரேயொரு வசனம். அதைமட்டுந்தான் அவளால் அப்போது சொல்லக்கூடியவாறு இருந்தது.

''இஞ்ச வராட்டி பிள்ளையும் நானும் செத்திருப்பம் தம்பி''

அவள் கடற்றொழில் செய்துவரும் ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள். அவர்களது குடும்பம் கடற்கரையில் கிடைக்கும் அன்றாட தொழிலின் அற்ப வருமானத்தில்தான் வாழ்ந்தது. கடலில் தொழிலற்ற நாட்களில் அவர்கள் அநேகம் உண்ண உணவேதுமின்றிப் பட்டினி கிடந்ததாகத்தான் சொன்னார்கள். ஏற்கனவே இரண்டு குழந்தைகளை போசாக்கின்மையால், அனீமியா எனும் நோய் நிலைக்கு, அவர்களுடைய மொழியில் சொல்வதானால் சத்தான சாப்பாடு தண்ணி இல்லாமல் இழந்திருந்தனர். இப்போது தனது மூன்றாவது குழந்தையுடன் போசாக்கு புனர்வாழ்வு நிலையத்தின் புதியவராக அவள் இருந்தாள்.

விஜயராணி, இரண்டுவயதான தன் குழந்தையுடன் இன்னும் சில நாட்களில் முள்ளியவளையில் இருக்கும் தனது வீட்டிற்கு செல்வதற்கு ஆயத்தமாகவிருந்தாள் குழந்தை சிந்துஜா என்னருகில் வந்து மழலைச்சிரிப்புதிர்த்தாள். தாய் என்னுடன் பேசத் தொடங்கினாள்.

''இஞ்ச நான் வந்து ஒருவருசத்துக்குமேலே ஆகீட்டுது.

''இப்ப இவளுக்கு (சிந்துஜா) நிறை தேறிவிட்டுது.

''போசாக்கு பராமரிப்பு நிலையத்தில இருந்து வீட்ட போகேக்க, எனக்கு வீட்டில உழைக்கிறதுக்கு ஒருத்தரும் இல்லை யெண்டு சிறுதொழில் ஊக்குவிப்பு உதவி செய்யிறதாய் சொல்லியிருக்கினம்.

''இப்பதான் எனக்கு நிம்மதியாயிருக்கு, நம்பிக்கையாயிருக்கு முதலில இவளை இஞ்ச கொண்டுவரேக்க என்ர பிள்ளை தப்புமெண்டு நான் நம்பேல்ல''

''இனி நான் உழைச்சு என்ர பிள்ளையை நல்லா வளப்பன''

தன்னுடை குழந்தையைக் காப்பாற்றி விட்ட சந்தோசமும், நாளைய தன் குழந்தையின் வாழ்வு மீதான நம்பிக்கையும் அவளது பேச்சில் தெரிந்தது.


''சரன்குட்டி, மாமாக்கு ஒரு 'பிளையிங் ஸ்'' கொடுத்து விடுங்கோ.

பராமரிப்பு நிலைய இணைப்பாளர், சரன் என்று அழைக்கப்பட்ட அந்த சிறுவனைப்பார்த்துக் கெஞ்சிக்கொண்டிருந்தார். தனக்கு எதுவுமே கேட்காதது போல அவன் அறையின் வாசலைநோக்கி நடந்துகொண்டிருந்தான்.

''சரனும் ஜெனிற்றாவும் சகோதரங்கள்''

உதவியாளர் ஒருவர் தூக்கிவைத்திருந்த ஒன்றரை வயது ஜெனிற்றாவைக் காட்டி இணைப்பாளர் பேசத்தொடங்கினார்.

''இவையட அம்மா ஜெனிற்றாவை பிரசவிக்கேக்க அனீமியா எண்ட கடுமையான போசாக்கு நிலைப் பாதிப்பால செத்திட்டா.



முன்பு



பின்பு

''இஞ்ச இந்தப் பிள்ளையைக் கொண்டுவரேக்க சரனுக்கு இரண்டு வயசு. ஆனால் நடக்கமாட்டான்.

''எப்ப பார்த்தாலும் சிணுங்கிக் கொண்டேயிருப்பான். எதிலையும் ஒட்டுதல் இல்லாமல், மெலிந்து, வயதுக்கேற்ற வளர்ச்சியோ, குழந்தைப் பருவத்து இயல்பான குறும்புகளோ எதுவுமே இல்லாம, மந்தமாய், ஆனா இப்ப பாருங்கோ எப்படி வளர்ந்திட்டான்?''

நிலைய இணைப்பாளர் என்னைப் பார்த்துச் சொல்லிக்கொண்டிருந்தார். தூரத்தே அறைவாசலில் அந்தச் சின்னப் பயன் என்னைப் பார்த்து 'பிளையிங்கிஸ்' கொடுத்துவிட்டு, புன்னகையுடன் வெளியில் விளையாட ஓடிக்கொண்டிருந்தான்.

இருமருங்கும் பூங்கன்றுகள் வளர்ந்திருந்த சிறிய முற்றத்தில் நான் நடந்துகொண்டிருந்தேன் ''இஞ்ச வரமுன்னம் என்ர பிள்ளைக்கு வெறும் சாயத் தண்ணிதான் கொடுக்கிறனான்'' ஏழ்மையின் ஆதங்கத்தில், தான்பெற்ற குழந்தைக்கு பால்மா தன்னும் வாங்கிக்கொடுக்க முடியாத வறுமையில் வாழ்விற்குப்போராடிய தாய் கண்ணீருடன் தன் இறந்தகாலத்தை விபரித்த வார்த்தைகளும், இன்னும் நான் அங்கே கேட்டவைகள் எல்லாமும், அந்த மழலைகளின் முகங்களும் மீண்டும் மீண்டும் என் நினைவுகளில தோன்றிக்கொண்டேயிருந்தது.

புதுக்குடியிருப்பில் இருக்கும் போசாக்கு புனர்வாழ்வு நிலையத்தில் நான் கேட்ட வார்த்தைகளையும், காட்சிகளையுந்தான் இப்போது நீங்கள் படித்துக் கொண்டிருக்கின்றீர்கள். கிடுகுகளால் வேயப்பட்டு அழகாக அமைக்கப்பட்ட அந்த நீண்ட மண்டபத்தினுள் இருபதிற்கும் மேற்பட்ட குழந்தைகளும், பாலூட்டும் தாய்மார்களும் பராமரிக்கப்பட்டு வந்தனர். கடந்தவருடம் ஐம்பது வரையிலான குழந்தைகள் இந்நிலையத்தில் மட்டும் பராமரிக்கப்பட்டதாகச் சொன்னார்கள்.

இன்றும் வன்னிமீதான பொருளாதாரத் தடையைத் தொடர்ந்துவரும் சிங்கள அரசு, எம் மக்களிற்கு கிடைக்கவேண்டிய அத்தியாவசிய நிவாரண, மருத்துவ உதவிகளைக் கூட மட்டுப்படுத்தி வருவது தெரிந்ததே.

மக்களின் சுயதேவையைத்தன்னும் பூர்த்திசெய்யத் தேவையான விவசாய உற்பத்தியில் ஈடுபடுவதற்குரிய உள்ளீடுகளையும், எரிபொருளையும், சராசரி

**- அன்புமாறன் -**

வாழ்வின் அத்தியாவசியமாகிவிட்ட சாதாரண சைக்கிள் பாவனைக்கான ரயர்களையும் கூட தடைசெய்துள்ள அரசு உழைப்பதற்கு வழியற்று, இடப்பெயர்வுகளாலும், இராணுவ அவலங்களாலும் துன்பப்படும் மக்களிற்கு அடிப்படை உணவு நிவாரண உதவிகளைக்கூட பூரணமாக கிடைக்கவிடாமல் தடைசெய்து நிற்கின்றது.

அரச செயலகங்களின் தகவல்ப்படி கடந்தவருடம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மட்டும் நிவாரணம் பெறத்தகுதியிருந்தும் 75,600 வரையிலான மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவதை அரசு தடைசெய்துள்ளது ஏறத்தாழ 40 மில்லியன் பெறுமதியான அத்தியாவசிய உணவு நிவாரணப் பொருட்கள் மாதாந்தம் வன்னிக்கு

(11ம் பக்கம் பார்க்க)



www.eelamview.com

www.eelamview.com



இது பேச்சுவார்த்தைக்
காலம். பேச்சுவார்த்தை
பற்றிய பேச்சுக்களாலேயே
காலம் கழியுங்காலம் என முன்னர்
எழுதியிருந்தோம்.
இப்போது இன்னும்
வெளிப்படையாக, மூடு மந்திரம்
எதுவும் இல்லாமல்
நிலைமைகளை
சீர் தூக்கிப்பார்ப்போம்.
பேச்சுவார்த்தைக்காலத்திலா
அல்லது போர்க்காலத்திலா
எதிரியின் வன்மம்
அவனது பேச்சுக்களில்,
எழுத்துக்களில் தெறிக்கும்?
பேச்சுவார்த்தைக்காலத்திலா
அல்லது போர்க்காலத்திலா
மிக வெளிப்படையாக
போர்க்கருவிகள் கொள்வனவு
பெருமளவில் நடக்கும்?
பேச்சுக்காலத்திலா
அல்லது போர்காலத்திலா
எதிரியை கருவறுக்க, பழிவாங்க,
ஒடுக்க, அவமானப்படுத்த
முயற்சிமேற்கொள்ளப்படும்?
பேச்சுவார்த்தைக்காலத்திலா
அல்லது போர்க்காலத்திலா
எதிரியை இரண்டாக
உருவகித்து. ஒரு
எதிரியை போர்மூலமும்,
மறுவெதிரியை பேச்சுமூலமும்
கையாள்வோமென
பகிரங்கரப்
பிரகடனப்படுத்தப்படும்? அல்லது
எக்காலத்தில் அமைதியை
முன்னெடுக்க,
போர்ச்சூழலை தணிவிக்க,
பகைமையை குறைக்க,
நல்லெண்ணத்தை காட்ட
முயலப்படும்? சொல்லுங்கள்
எம் மக்களே.!

இப்போது இன்னும்
வெளிப்படையாக அலசுவோம்?
பேச்சுவார்த்தைக்காலமென்றால்
அன்று மலேயா, பின்னர்,
பிலிப்பைன்சு போன்ற
நாடுகளிலும் எல்சல்வடோர்
போன்ற தென்னமெரிக்க
நாடுகளிலும் இதன் பிரதிபலிப்பை
நாம் காணமுடியும்.
இத்திட்டம் நுணுக்கமானதொரு
உளவியல் பண்பு வாய்ந்தது.
நீண்டு செல்லும் போர்
காரணமாக வதைபடும்
மக்களின் போர்ச்சலிப்பை
ஆதாரமாகக் கொண்டு
போராடுபவர்களின் உள
உறுதியை சரியச்செய்யும்,
சறுக்கச்செய்யும் வகையில்
போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை,
பொதுமன்னிப்பு.
ஆயுதக்கையளிப்பு, உடன்பாடு,
மறுவாழ்வு, சனநாயகம்
என மயக்கம் தரும்,
ஆனால், விருப்பம் தரும்
சொற்களின் உச்சரிப்பால்
நிரம்பியது. உச்சரிப்போடு
நிற்காமல் உருப்படியான
செயற்பாடுகளை
முன்னெடுப்பதன் மூலமே
இதன் இலக்கு அடையப்படும்.
இலக்கு என்ன?
எழுபது விழுக்காடு நிலப்பரப்பை
கைப்பற்றி வைத்த
எல்சல்வடோரின் FMLN
அமைப்பு, புதிய மக்கள்
இராணுவம் எனப்பட்ட
பிலிப்பைன்சின் NPA
இயக்கம் என்பன வரலாற்றின்
பக்கங்களில் இருந்து
அழிக்கப்பட்டன. இவ்விலக்கில்
பெருவிருப்பம்
கொண்டுள்ள சிங்கள அரசிற்கு
அவ்விலக்கை அடைவதற்காக
கூட போர்நிறுத்தம்,
பொருண்மியத்தடை நீக்கம்
போன்ற முதற்கட்ட
செயற்பாடுகளையே
பரீட்சித்துப்பார்க்க கூட
நிர்ப்பந்தங்கள்,
நெருக்கடிகள். காரணமாக
அமையும். தென்னமெரிக்காவின்
மிக நீண்ட
பேச்சுவார்த்தைகளை
இங்கு தொடர்புபடுத்தலாம்.
இம் மூன்று தோற்றப்பாடுகளில்
சிறீலங்கா. புலிகள்
பேச்சுவார்த்தை தொடர்பான
வழிமுறைகள் எதனுள்
வருகின்றது? அல்லது எதனுள்
வரவேண்டும்? சொல்லுங்கள்
எம் உடன்பிறப்புக்களே!

இதில் எதனுள்ளும் பொருத்தி
வருவதாக தெரியவில்லை. இங்கு
தான் ஒரு பெருண்மை அல்லது
மாபெரும் சதி ஒன்று
அம்பலமாகின்றது.
பொருண்மிய நலன்களையே
மட்டும் தமது நலனாகக்கொண்டு
செயற்படும் சர்வதேச
பேராண்மை நாடுகளின்
உலகமயமாக்கல் போக்கிற்கு
இசைவாக தனது தாய்நாட்டு
நலன்களையே
விட்டுக்கொடுத்ததோடு
அம்மையார் நிற்கவில்லை.;
புதிய மொந்தையில் பழையகள்
எனபதுபோல பனிப்போர் காலம்
தாண்டியும்
விடுதலைப்போராட்டத்தினை
விடாது தொடரும் புலிகளை
வீரியங்குறைக்க புதிய
வழிமுறைகளை பரீட்சித்து
பார்கக ஒரு வாய்ப்பையும்
அம்மையார் வழங்கியுள்ளார்.
இவ்வழிமுறை எத்தகையது?
உலக நீதியின், ஓரவஞ்சகம்
வெளிபபடும் இடம எவ்வளவு
குரூரமானது?
''மீறப்படுவது யாருடைய
மனித உரிமை என்பதைப்
பொறுத்தே அது மனித உரிமையா?
யாசகம் கேட்ட வழிமுறையைகூட
அம்மையார் பின்பற்றுகின்றார்.
போர்நிறுத்தத்தை பெரும்
மனவுளைச்சலின் மத்தியில்
மேற்கொள்ளும் புலிகள் தங்களது
போர்நிறுத்தத்தை அவர்களே
மீறிவிட்டார்கள் என
கூச்சநாச்சமில்லாமல் பட்டியல்
போடுமளவு படு பாதாளம்
இறங்கவும் அவர்கள் தயாராகி
விட்டார்கள். இவ்வாறாக
ஒரே வேளையில
இருமுனைகளில் இராசதந்திர
அரசியல் இராணுவ
தாக்குதல்களுக்கு முகம்கொடுத்து
செயற்படும் புலிகளுக்கு இப்போது
எம் மக்கள் பொங்கு தமிழாகி
புலிகளே தங்கள் எண்ணங்களை
பிரதிபலிக்கின்றார்கள் என
ஒருமித்த குரலாக கூறி ஆதரவு
தெரிவிக்கும் அற்புதம்
நிகழும் காலமிது

இந்நிலையில் புலிகளோடு
இணைந்து ஒன்றித்து அவர்கள்
பெற்ற வெற்றிகட்கு காரணமாக
அமைந்த எம்மக்களுக்கு
வெற்றிக்கனியை கையளிக்க
ஆயத்தமாகவிருக்கும்
வரலாற்றன்னை விடுக்கும்
வேண்டுகை இதுதான்.
''தமிழ் மக்கள் என்ற பெயரில்
வரலாற்றின்
புதல்வர்களாகிவிட்ட நீங்கள்
எத்தனை தடைகளை
தாண்டி விட்டீர்கள்.
இத்தடைதாண்டும் போட்டியில்
தாண்ட வேண்டிய இறுதித்தடை
இதுதான். இத்தடை தாண்டினால்
அதுவே வெற்றியின்
படிக்கட்டாகி விடும்''
ஏனென்றால் இராசதந்திரம்
என்றால் முடிந்தளவு பாரிய

# உள்ளதை உள்ளவாறே உரைக்கின்றோம்

**- க. வே. பாலகுமாரன் -**

அதன் அரசறிவியல்
பொருள் என்ன? அரசியல்,
இராசதந்திரம் என
சொல்லப்படும் சொற்களின்
தொடர்பென்ன?
போர் என்பது இன்னொரு
விதத்தில் அரசியலின்
நீட்சியேயெனக் குறிப்பிட்ட
அதே குளோசுவிற்சு
தான் போரின் இன்னொரு
வடிவம்தான் இராசதந்திரம்
என்கிறார். அப்படியானால்
போர்மூலம் பெறமுடியாததை
அல்லது செய்யமுடியாததை
இராசதந்திரம், அரசியல்
என்பன மூலம் செய்யப்படும்
எனப் பொருள் நாம்
கொள்ளமுடியுமா?
இதை மேலும் விரிவாக
பேசுவோம்.

பேச்சுவார்த்தை அதனோடு
தொடர்புடைய இராசதந்திரம்,
அரசியல் என்பதன் போக்கினை
வரலாற்றின் வழிவந்த
பட்டறிவின் அடிப்படையில் நாம்
மூன்று வகையாக
நோக்கலாம். ஒன்று
போர்மூலம் செய்யவிரும்
பியதை முடியாத நிலையில்
பேச்சுவார்த்தை மூலம்
செய்தல்; இது
அடக்குமுறையாளரின்
நாடகத்திட்டம் மக்கள்
கிளர்ச்சிகளை நசுக்க அமெரிக்க
கும்பல் வகுத்த
மோசத்திட்டம்.

பனிப்போர்காலத்தில் இது
மிக வெளிப்படையாக ஒரு
கோட்பாடாக
உணரத்தக்க வகையில்
நடைமுறையில் இடப்பட்டது;
விருப்பமில்லை. புலிகளை
இவ்வாறு ஏய்க்கமுடியாது
என்பதும் அவர்கள் வரலாற்று
குருடர்கள் அல்ல என்பதும்
ஏற்கனவே உணரப்பட்ட
உண்மை.

இரண்டாவது போக்கு
பெரும்பாலும் போரில் ஈடுபடும்
இருதரப்பிற்கோ
அல்லது ஒரு தரப்பிற்கோ
இன்னொருநாள் போர்
செய்வதற்கு இன்று ஓய்வு
தேவைப்படும்
நிலையை அடிப்படையாக
கொண்டது.
இதற்கும்கூட சிலகாலம்
ஒப்பிற்காவது பேச்சுவார்த்தை,
போர்நிறுத்தம், உடன்பாடு
என விட்டுக்கொடுப்புக்கள்
தேவைப்படும். இதுகூட
சிறீலங்காவிற்கு
வேப்பங்காய்தான்.
மிஞ்சியிருக்கும் வழிமுறை
உண்மையிலே சமமந்தப்பட்ட
இருதரப்புமே
விட்டுக்கொடுப்புக்கள்,
இணக்க போக்கு,
சகிப்புத்தன்மை, பெருந்தன்மை
போன்றபண்புகளில்
ஒருசிலவற்றையாவது
வெளிக்காட்டி பேச்சுக்களில்
ஈடுபடுதல் இச்சூழ்நிலைக்கு பல
இல்லையா''
(பேராசிரியர் சிவசேகரம்)
என தீர்மானிக்கும். உலகின்
இழிகுணம் வெளிப்படும் விதம்
பாருங்கள். போரை நிறுத்துங்கள்
பேச்சில் ஈடுபடுங்கள் சனநாயக
நதியில் குதியுங்கள் என
புலிகளுக்கு இடைவிடாத
போதனை, அழுத்தம்.
அம்மையாருக்கோ பெரும்
போர்கருவிகள் கொள்வனவிற்கு
வாய்ப்பு. பேரினவாத வெறியை
திருப்தி செய்ய தடை.

அதேவேளை முற்றாக
தம் சட்டுப்பாட்டிலிருந்து
சிங்களம் கைநழுவிப்
போகாதிருக்க தக்கதான
மட்டுப்படுத்தப்பட்ட நிதியுதவி,
இதன்மூலம் அதனை
பேச்சுவார்த்தை மேசைக்கு
தள்ளும் தந்திரம்.

இது சர்வதேசத்தின்
நிகழ்ச்சி நிரல் ஆனால்
அம்மையாரின் நிகழ்ச்சிநிரல்
வேறு. புலிகள் எனும்
இரும்புக்கவசம் பூண்டு நிற்கும்
தமிழ் மக்களை எவ்வாறு
கவசத்திலிருந்து அகற்றி
நிர்கதியாக்கிவிடுவது?
வெல்ல முடியாத கர்ணனிடம்
தடைகளை போராடுபவருக்கு
இட்டுப் பார்ப்பது
தடைகள் யாவற்றையும் தாண்டிய
நிலையில் வெற்றியாளனுக்கு
எல்லாம் உரியது என ஏற்பது
என்றும் பொருள்படும்.

எனவே தான்
'இளங் குருத்துகளும்,''
''குருத்தோலைகளும்'' போராடும்
காலத்தில் சற்று முற்றிய
பசிய ஓலைக்கும்
போராடவேண்டிய நிலையை
தலைவன் உணர்த்தியுள்ளான்.
வெற்றியை எமதாக்க மக்கள்
என்ன செய்ய வேண்டும்?
லெனின் கூறுகிறார்:

1) புரட்சிகர எழுச்சியுடன்
என்றுமே விளையாட வேண்டாம்
அதை தொடங்கும் போது
கடைசி வரைக்கும் செல்லவேண்டும்
என்பதை உறுதியாக
உணர்ந்திருகக வேண்டும்.

2) தீர்மானகரமான முனையிலே
தீர்மான கரமான தருணத்திலே
மாபெரும் ஆற்றல் மிக்க (மக்கள்)
சக்தியை ஒரு முனைப்படுத்த
வேண்டும். இல்லாவிட்டால்
பலமிக்க எதிரி வெற்றி நோக்கி
நகர முற்படுவான்.

3) எதிரி படைபலம்
சிதறிக்கிடக்கும் வேளையில்
நீங்கள தாக்குதலை சடுதியாக
தொடரவேண்டும்.

''நீதியான போர்களிலும்
தற்காப்பு போர்களிலும
ஆயுதமேந்திய மக்கள செயல்
திறமை பற்றியும் அவர்கள வகித்த

(11ம் பக்கம் பார்க்க)




www.eelamview.com

www.eelamview.com



"யுத்தநிறுத்தம் புலிகளின் சந்தர்ப்பவாத செயல்." "புலிகள் யுத்தத்தில் இராணுவ ரீதியாக பலவீனப் பட்டுப்போயுள்ளதாலேயே தம்மைப் பலப்படுத்திக் கொள்ளும் அவகாசத்திற்காக யுத்தநிறுத்தத்தை கோருகின்றனர்." "களத்தில் இராணுவத்தினரின் கைகள் மேலோங்கியுள்ளதால் புலிகள் யுத்தநிறுத்தம் கோருகின்றனர்." நோர்வே அரசின் சமாதான முயற்சியை ஆர்வமாக வரவேற்ற தமிழீழ விடுதலைப் புலிகள், போரில் ஈடுபடும் இருதரப்பும் பரஸ்பர நல்லெண்ணத்தை பரிமாறிக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்தத்தை அறிவித்து தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி பதிலுக்கு அரசிடமிருந்தும் இத்தகைய நல்லெண்ண சமிக்கை கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில் கட்டிவளர்க்கப்பட்ட நல்லெண்ணச் சூழலில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க ஆர்வமாக இருந்த வேளையில், அரசிடமிருந்து எழும்பிய பதில் கருத்துகளே இவையாகும். யுத்தநிறுத்தத்தை தட்டிக்கழிப்பதற்கு அரசு அளித்த இந்த வியாக்கியானத்தின் உண்மை நிலை என்ன?

யுத்தத்தில் ஈடுபடும் இருதரப்பின பலம், பலவீனங்களை கணிப்பிட வேண்டுமெனின் முழுமையான யுத்தநிலைமையை ஆராயவேண்டியது அவசியம். நடந்துவரும் போரின முழுமையான யுத்தநிலைமை என்பது வடபோர்முனையிலிருந்தே கணிப்பிடக்கூடியது இது முழுமையான யுத்தத்தின் பகுதியேயாயினும் இதுவே மூலோபாய ரீதியில் முழுமையான யுத்தத்தை தீர்மானிக்க வல்லதும் தீர்க்கமானதுமான போர் முறையாக உள்ளது. எதிரிடபடைவலுவுக்கான வெற்றிகொள்வதற்கான இருதரப்பினரதும் மூலோபாயம் இங்கேயே மையப்படுத்தப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தை இராணுவம் ஆக்கிரமித்தபின் அதற்கான தரைவழிப்பாதையை திறப்பதற்காகவும், வன்னியை வெற்றிகொள்வதற்கான மூலோபாய நகர்வாகவும் 'சத்ஜெய', 'ஜெயசிக்குறு' ஆகிய நடவடிக்கைகள் படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் 'ரணகோச' நடவடிக்கையும் இதன் நோக்கமாக இணைந்து கொண்டது. சுமார் மூன்று வருடகாலம் இத்தகைய இராணுவ நோக்கத்திற்காக படைத்தரப்பு வன்னிப் பெருநிலப்பரப்பின் பல முனையால் முன்னேறியிருந்தது. பெருமளவு நிலப்பரப்பை ஆக்கிரமித்துமிருந்தது. முற்றுப்பெறாத தனது இராணுவ நோக்கத்திற்காக மீண்டும் மீண்டும் அது மிகக் கடுமையான முயற்சியை எடுத்தவண்ணம் இருந்தது ஆரம்பத்தில் அதன் சாதகமான முன்னேற்றத்தினால் நடவடிக்கையின் முடிவிற்கான காலக்கெடுக்களை வழங்கும் அளவிற்கு தமது பலத்திலும் அடைந்த வெற்றியிலும் இராணுவம் நம்பிக்கை கொண்டிருந்தது. வன்னிப் போர்முனையிலான வெற்றி, முழுமையான யுத்தநிலைமையை தலைகீழாக மாற்றியமைக்கக்கூடியது என்ற வகையில் படைத்தரப்பு தனது முழுத்திறனையும் இந்த நடவடிக்கையில் ஒருமுகப்படுத்தியது. முன்னேறிய ஒவ்வொரு அங்குலத்திற்கும் பெருமளவு உயிர்களை விலையாக கொடுக்க நேர்ந்தபோதும் புலிகள் மீதான வெற்றியை அடைவதற்கான திறவுகோலாக அதற்கான விலையாக இழப்புகளை ஜீரணித்துக்கொண்டது. அல்லது வெற்றி மீதான நம்பிக்கையில் எத்தகைய விலையையும் கொடுக்க படைத்தரப்பு தயாராக இருந்தது.

இச்சூழ்நிலையில், புலிகளின் ஓயாத அலைகள் 03 என்ற நடவடிக்கை குறுகியகால இடைவெளிக்குள் இராணுவத்தால் கடந்த மூன்றாண்டு காலமாக ஆக்கிரமிக்கப்பட்ட முழு நிலங்களையும் விடுவித்தததுடன் பனலாற்றுப் பிரதேசத்தில் 1984 இல், இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட "சிலோன் தியட்டர்", ஒதியமலை, தனிக்கல் போன்றவற்றையும் மீட்டதோடு இறுதியாக, பலப்பரீட்சையின் அலைது

# அரசு பகிர்ந்து வெ

# பரஸ்பர உற



இராணுவத்தின் இராணுமையின் பொருதுகளமாகவிருந்த ஆனையிறவு தளத்தையும் வெற்றி கொண்டு ஓயாத அலைகள் - 03 யாழ். தென்மராட்சி நோக்கி பிரவேசித்தது.

இந்த பிரமிப்பான இராணுவ சாதனையில் வெல்லப்பட்டது வெறும் நிலப்பரப்புக்கள் அல்ல; இராணுவப் பெருந் தளங்களோ மட்டும் அல்ல. முழுமையான யுத்தநிலைமையில் இந்த வெற்றியின் தாக்கம் எவ்வாறானதெனின், இராணுவத்தினுடைய புலிகள் மீதான போர நடவடிக்கையின் மூலோபாயத்தை புலிகள் சிதறடிக்கச் செய்துவிட்டனர் என்பதே. இறுதி இலக்கிற்காக இராணுவம் கொடுத்த உயிர்விலையும், புலிகளின் ஓயாத அலைகள் 03 நடவடிக்கையில் அடைந்த உயிரிழப்புமாக பத்தாயிரத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் இதைவிட அதிகமானோர் காயமடைந்து எதிரியின் போர்வலு சிதைவுற்றது. குறுகிய காலத்தில் மீளொழுங்குபடுத்தப்பட முடியாதவாறு படைக்கட்டமைப்பு வலு உருக்குலைந்தது. இராணுவம் தனது போரிடும் ஊக்கத்தை, தாக்கு மனநிலையை, இழந்தது. எதிரியின் தாக்குதிறனை வெற்றிகரமாக சிதைவுறச் செய்வதில் புலிகள் வெற்றிகண்டனர். ஆட்லறிகள், மோட்டார்கள் அதற்கான எறிகணைகள் உட்பட பல ஆயிரம்கோடி ரூபா பெறுமதியான ஆயுத தளபாடங்கள் புலிகளின் ஆயுதக்களஞ்சியங்களை நிரப்பின. யாழ்ப்பாணத்தின் மூன்று நுழைவாயில்களையும் புலிகள் கைப்பற்றியதனூடாக, முப்பதாயிரம் துருப்புக்களை பிறைவடிவில் சுற்றிவளைத்து அடுத்த கட்டத்திற்கான போர் வியூகத்தை தமக்கு சாதகமாக்கிக்கொண்டனர். இத்தகைய பின்னணியில், அரசு அகநிலையிலும், புறநிலையிலும் இறுகிப்போய்நின்ற கட்டத்தில் முழுமையான யுத்த நிலையின் மதிப்பீட்டைசுருங்கக் கூறுவதாயின், அடுத்து களமுனையில் நிகழக்கூடியவற்றை கணிப்பீடுசெய்ய முடியாதவாறும், களநிலைமை கட்டுப்பாட்டிற்குள் இருப்பதை உறுதிசெய்ய முடியாததுமான நிலையிலேயே படைத்தரப்பு உயர்பீடம் இருந்தது.

இத்தகைய சூழ்நிலையில்தான் நோர்வேயின் சமாதான முயற்சிக்கான அழைப்பிற்கு அரசும் இணங்கியதற்கேற்ப, புலிகளும் அதனை வரவேற்று சமாதான வழிமுறை மூலம் பிரச்சனைக்கு தீர்வுகாண தமது ஆர்வத்தை வெளிப்படுத்தினர். இத்தகைய ஒருநிலையை எட்டுவதற்காக ஏற்படுத்தப்படவேண்டிய நல்லெண்ண சூழலை உருவாக்கும்பொருட்டு புலிகள் ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்த அறிவிப்பை விடுத்திருந்தனர். இதனை "களத்தில் இராணுவத்தின் கைமேலோங்கி நிற்பதால் புலிகள் யுத்தநிறுத்தமொன்றைச் செய்கின்றனர்' என்று அரசுவாதித்தால் அது இந்த புத்தாயிரம் ஆண்டின் பரிசுக்குரிய நகைச்சுவையாகிவிடாதா?

தவிரவும், புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பை நயவஞ்சகமாகப் பயன்படுத்தியதன் மூலம், படை ஒருமுகப்படுத்தலை செய்ய முடிந்த இராணுவம் கைதடி, நாவற்குழி, தனங்கிளப்பு, ஆகிய பகுதிகளை நோக்கி முன்னேற முடிந்தது. இதனால், புலிகள் ஒரு தந்திரோபாய பின்வாங்கலை செய்ததினூடாக படைத்தரப்பு மீளவும் அப்பிரதேசத்தை ஆக்கிரமித்துக்கொண்டது. இதன்பின், இந்நடவடிக்கை வழிநடத்திய வடபோர்முனைக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜஜேந்திரா பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டி இங்கு கவனிப்பதற்குரியது.

கேள்வி:- 'ரிவிகிரண' 'கினிரகி- 08' இராணுவ நடவடிக்கைகள் ஊடாக பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்ட இப்பிரதேசங்களில் இராணுவ தந்திரோபாய ரீதியாக ஏதேனும் பெறுமதி உண்டா.?

பதில்:- இப்பிரதேசங்கள் புலிகளின் கட்டுப் பாட்டிற்குள் இருக்குமாயின் யாழ்ப்பாணத்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் இலகுவாக புலிகள் தாக்கக்கூடிய ஓர் நிலையிருந்தது.

ஆக, புலிகள் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்த அறிவிப்பை விடுக்கும்போது யாழ்ப்பாணம் எந்த நிலையிலும் தாக்கபடவும், புலிகளின் கையில் விழவும் கூடும் என்னும் யதார்த்த நிலைமை இருந்ததை வடக்கு கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜஜேந்திரா ஒப்புக்கொள்கின்றார் ஆயின், எதற்காக ஒரு தலைப்பட்ச யுத்தநிறுத்தம் "பலவீனத்தின் வெளிப்பாடு" என்றும் "புலிகளின் சந்தர்ப்பவாத நிலை" என்றும் அரசு குட்டையைக் குழப்புகிறது.




www.eelamview.com

www.eelamview.com



அரசு புலிகளின் மீதான இறுதி வெற்றிபற்றி சிங்கள மக்கள் மத்தியில் கட்டிவளர்த்த கருத்து மாயையால் அரசபடைகள் அடைந்த மிக மோசமான தோல்வி காரணமாக சிங்கள மக்கள் அரசு மீது சீற்றம்கொண்டுள்ளனர். இச்சந்தர்ப்பத்தில் அரசு யுத்தநிறுத்தத்திற்கு உடன்படுவது அரசின் இயலாமையாக சிங்கள மக்களால் உணரப்படும் என்ற அச்சம் ஒருபுறம். இதனால் இனவாதத்திற்கு தலைமை தாங்கிவந்த சந்திரிகா அரசிற்குப் போட்டியாக புதிய வீச்சுடன் வேகமாக முன்னேறிவரும் ஜே. வி. பி. 'சிகல உறுமய' போன்ற கட்சிகள் சிங்கள இனவாதத்திற்கு புதிய தலைமையை அளித்துவிடும். அல்லது தனது அரசியல் பலத்தை உடைத்துவிடும் என்ற அச்சம் அரசிடம் உண்டு.

மறுபுறம், இராணுவ ரீதியில் ஒரு தாழ்நிலையில் இருந்துகொண்டு பேச்சுவார்த்தை மேசையில் அமர்வதால் புலிகளிடம் பேரம் பேசும் ஆற்றலை கையளித்துவிட்டு அமர்வதாக தடை தடைப்பட்டுப் போய்விடும் என்று அரசு எண்ணியது. இத்தகைய காரணங்களினால் அரசு யுத்தநிறுத்தத்திற்கு உடன்படுவதை தவிர்த்தாலும் நோர்வேயின் சமாதான முயற்சியை எதிர்த்து மறுக்காமல் தனது உடன்படாமைக்குப் புதிய வியாக்கியானங்களை அளித்து, கால இழுத்தடிப்பைச் செய்வதன் மூலம் அவகாசத்தைப் பெற்றுக்கொண்டு இராணுவ ரீதியில் பெரும் தயார்ப்படுத்தலுடன் புலிகள் மீதான ஒரு வெற்றியை நிலைநாட்டிவிட வேண்டுமென அரசு அவாவுகின்றது. இதன் மூலம் இராணுவ மேலாதிக்க நிலையில் இருந்துகொண்டு தமிழர் மீது இனவாதத்தின் தீர்வு ஒன்றை திணித்துவிடலாம் என்று அரசு முயற்சிக்கின்றது. இதற்கான அசைவுகளையே அரசிடம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.



ஐரோப்பிய நாடுகளிடம் புலிகளைத் தடைசெய்யக் கோரிவருகின்றது அரசு. அதேநேரம் பாகிஸ்தான், இந்தியா, செக் குடியரசு ஆகிய நாடுகளிடமிருந்து பெருமளவில்

# ...கொள்ள நினைப்பது ...வா? பகையா?

அமைந்துவிடும். இதனால் சர்வதேச சமூகத்தின் அவதானிப்போடு மூன்றாம் தரப்பு ஆதரவில் நிகழக்கூடிய இப்பேச்சுவார்த்தையில் இனப்பிரச்சனைக்கான தீர்வாக சர்வதேச சமூகம் எதிர்பார்ப்பதற்கேனும் உடன்படத் தயாரில்லாத தனது இனவாத முகம் அம்பலமாகிவிடும், இதனால் தனக்கு ஏற்படும் அழுத்தமும் புலிகளின் நியாயப்பாடும் மேலும் வலுவடையுமென்று அரசு அஞ்சுகின்றது.

மற்றும் பிரித்தானியா பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டுவரவிருந்த சூழலில் யுத்தநிறுத்தம் செய்து பேச்சில் ஈடுபட நேர்ந்தால் பிரித்தானியாவில் புலிகள்மீதான

— கு. கவியழகன் —

முப்படைக்குத் தேவையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்து குவிக்கின்றது. மற்றும், அந்த நாடுகளின் அமைச்சுப் பொறுப்பில் உள்ளவர்களுடனும், இராணுவ அதிகாரிகளுடனும், ஆயுத விற்பனையாளர்களுடனும் கொழும்பு தீவிரதொடர்பைக் கொண்டுள்ளது. கொழும்பினுடைய நடவடிக்கைகள் ஒரு சமாதானத்திற்கான ஆயத்தப்படுத்தலாக எவராலும் கணிக்கப்படக் கூடியதாக இல்லை.

வடக்கு சட்டளைத் தளபதி அன்ரன் விஜேரேந்திரா ''அரசாங்கம் போதிய பலத்துடன் சமாதான பேச்சுவார்த்தையில் பங்குபற்றப் போவதாக தீர்மானிப்பதாயின் அதற்குத் தேவையான சூழல் இன்று இருக்கின்றது'' எனகிறார். மேலும் அவர் ''ஆனையிறவு எங்கள் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசம். மனோ நிலை ரீதியாக எங்களுக்குத் தாக்கம் ஏற்பட்ட போதும் அதனைக் கூடிய விரைவில் கைப்பற்றும் நோக்கம் எங்களிடம் உண்டு'' (லக்பிம - 14/022001)

என்று கூறுவதில் அரசு ஒரு யுத்த தயார்ப்படுத்தலை செய்கின்றது என்பதைத் தவிர வேறு எதுவும் தொனிக்கவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி செயலாளரும் அமைச்சருமான எஸ். பி. திஸாநாயக்காவும் ''தொடர்ச்சியான பின்னடைவு காரணமாக எல். ரி. ரி. யுத்தநிறுத்தத்தை அறிவித்துள்ளது எல். ரி. ரி. யுடனான கொடுக்கல் வாங்கல்களுக்கு முடிவுகட்டவே நாம் தயாராகிவருகின்றோம்'' என்று கூறுரைக்கின்றார்.

மேலும் பிரதம மந்திரி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி ஆகியோரும் நோக்குகளையும், பேச்சுவார்த்தை பற்றிய அணுகுமுறையையும் தெளிவாகக் காட்டுகின்றன.

அது இராணுவம் தனது முழுமையான இயலாமையை அடையும்வரை சிங்கள அரசு தனது இனவாத மனவோட்டத்திலிருந்து மாறப்போவதில்லை என்பதைத்தவிர வேறு எதனையும் இதிலிருந்து நாம் விளங்கவதற்கில்லை. அத்துடன் சர்வதேச சமூகம் இலங்கையின் ஐக்கியம், இறையாண்மை ஒருமைப்பாட்டை வலியுறுத்துவதால் அதனை ஏற்றுக்கொள்ளவைக்க

**அரசு யுத்த நிறுத்தத்திற்கு உடன்படுவதைத் தவிர்த்தாலும் நோர்வேயின் சமாதான முயற்சியை எதிர்த்து மறுக்காமல் தனது உடன்படாமைக்குப் புதிய வியாக்கியானங்களை அளித்து, கால இழுத்தடிப்பைச் செய்வதன் மூலம் அவகாசத்தைப் பெற்றுக்கொண்டு இராணுவ ரீதியில் பெரும் தயார்படுத்தலுடன் புலிகள் மீது ஒரு வெற்றியை நிலைநாட்டிவிட வேண்டுமென அவாவுகின்றது.**

இத்தகைய கருத்துக்களையே முன்வைக்கின்றனர். வெளிவிவகார அமைச்சர் தனது இந்திய விஜயத்தின்போது அளித்த பேட்டியில் ''சர்வதேச சமூகம் இலங்கையின் ஐக்கியம், இறையாண்மை, ஒருமைப்பாடு ஆகியவற்றை வலியுறுத்துவதால் அதனை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்காக புலிகள் மீது ஒரு படைநடவடிக்கை அவசியம்'' என்கிறார். இவையெல்லாம் அரசின் உள்ளார்ந்த

புலிகள் மீது ஒரு படைநடவடிக்கை அவசியம் என்றால், சர்வதேச சமூகம் தமிழரின் தாயகபூமி, சுயநிர்ணய உரிமை, சுயாட்சி அலகு என்பவற்றை வலியுறுத்தி வரும்போது அதனை ஏற்றுக்கொள்ளாத அரசு மீது ஒரு படை நடவடிக்கையைச் செய்வது பேச்சுவார்த்தைக்கு அவசியம் இல்லையா என்ற கேள்வியும் சேர்ந்தே எழுகின்றது. ○



www.eelamview.com

www.eelamview.com



# கரும்புலி மேஜர் சிறிவாணி

அவள் அழுதுகொண்டு இருந்தாள்... மனதுக்குள் அல்ல. அது ஒருபுறம் இருக்க சத்தமாக விக்கி விக்கி அழுதாள். அவளது அழுகைச் சத்தம் எங்கும் பரவியது. ஆனால், அவளது அழுகைக்கான காரணம் சிலருக்குத்தான் தெரிந்திருந்தது.

அந்த அழுகையில் ஏதோ ஒரு வேண்டுதல் இருந்தது. அவள் கலங்கும் விழிகளில் என்னவோ எதிர்பார்ப்பு நிறைந்திருந்தது.

அவளின் வேண்டுதலும் எதிர்பார்ப்புகளும் சாதாரணமானதாய் இருக்கவில்லை. தாக்குதலுக்கு புறப்படுகின்ற அணிகளோடு தானும் தாக்குதலுக்குச் செல்ல வேண்டும். அதற்காகத்தான் அந்த அழுகை. இதைவிட அவள் வேறு எதற்காகவும் கண் கலங்குவதில்லையே.

அவள் தன்னுடன் நிற்கின்ற அணிகள் செல்லும் சண்டைகள் அனைத்திற்கும் தானும் சென்று வரவேண்டும், தன்னால் அதி உச்சமாய் தேசத்திற்கு எதைச் செய்ய முடியுமோ அதை செய்துவிட வேண்டும் என்ற ஆவலும்தான் நிறைந்திருந்தது.

அந்த ஆவலும் சுறுசுறுப்பும் அவள் இயக்கத்தில் இணைந்த நாளில் இருந்து என்றும் குறைந்ததே இல்லை. அணிகள் வேவிற்காகவோ, அல்லது தாக்குதலுக்காகவோ புறப்படத் தயாராகுகின்றது என்றால் அவள் ஆவல் மேலெழ தானும் அந்தக் களங்களுக்குச் சென்றுவிட வேண்டுமென துடித்துக் கொண்டிருப்பாள். அவளின் இடைவெளி இல்லாத வேண்டுதலினால் பொறுப்பாளர் அவளிற்கு அந்தத் தாக்குதல் சந்தர்ப்பத்தை கொடுத்தால் அவளது முகம் அடுத்த கணமே எண்ணற்ற மகிழ்ச்சியால் மலரும். புன்னகை தவழும் முகத்தோடு மற்றவர்களிற்கும் சிரிப்பூட்டிக் கொண்டு தானும் சிரித்து கலகலப்பாக இருப்பாள். இப்படி சண்டை ஒன்றிற்கு செல்வதற்காய் சண்டை செய்பவள்தான் சிறிவாணி.

அவள் அதிக உயரம் இல்லாத தோற்றம். சிரித்து எல்லாரோடும் பழகுகின்ற சுபாவம், மற்றவர்களைப் புரிந்து கொண்டு அவர்களோடு அன்பாய்ச் சண்டை செய்வது, அவர்களைக் கோபப்படுத்தி பின்பு அன்பு வார்த்தைகளால் நெகழச்செய்து தாயாய் அரவணைக்கும் இயல்பு, அடிக்கடி ஏதாவது குறும்பு சொல்லி எல்லோரையுமே மகிழ்வாய் வைத்திருக்க வேண்டும் என்ற துடிப்பு எல்லாம் அவளிற்கு உரிய பண்புகள்.

சிரித்து கலகலப்பாய் அவள் திரிகின்ற போது மனதில் சிறுதுளிக் கவலையும் இல்லாதவளைப் போல் மற்றவர்களுக்குத் தெரிந்தாலும் அவளிற்கு மட்டுமே அடையாளம் தெரியும் சோகங்கள் எத்தனையோ...

அவள் ஊரை விட்டு இயக்கத்திற்கு புறப்பட்டு பத்து வருடங்கள் ஆகப்போகின்றன. இந்த நீண்ட கால இடைவெளியில் மீண்டும் ஒரு தடவை அவள் நேசித்த ஊரையோ வீட்டாரையோ பார்க்க முடியவில்லை. இந்த ஏக்கம்தான் மழை விட்ட பின்னும் சூழ்ந்திருக்கும் கருமேகமாய் நினைவில் எங்கும் படர்ந்திருந்தது. என்ன செய்வது இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் அவளின் ஊரும் உறவுகளும். விடுமுறையில் சென்றாலும் அவள் எப்படி அவளின் 'கழுதாவளை'க் கிராமத்தைச் சென்று பார்ப்பாள் அங்கிருக்கும் உறவுகளோடு எப்படி கதைப்பாள். அதுதானே பகலில் போராளிகள் நடமாட முடியாத இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசமாயிருக்கிறதே.

அம்மா அப்பாவை பார்க்க வேண்டும் அவர்களோடு பேச வேண்டும் என்ற மனக் குமுறலோடு, அவள் சிறு பிள்ளையாய் தூக்கி விளையாடி பாசம் கொட்டிவளர்த்த ஆசையும் தம்பியைப் பார்த்துவிட வேண்டும் என்ற நினைவுகளும் நெஞ்சில் பலமாக அடித்துக் கொண்டிருந்தன.

மனம் விம்மி வேதனையில் தவிக்கின்றபோது அவளிற்குள் எழுகின்ற எண்ணங்களை கடிதமாக்கி அப்பா அம்மாவிற்கு அனுப்புவதற்கு கூட முடியாது அவள் அனுப்புகின்ற கடிதங்கள் இராணுவத்திடமோ, அல்லது தேசத் துரோகிகளிடமோ அகப்பட்டு விட்டால் வீடு எதிர் நோக்கும் அவல நிலையை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. அதனால்தான் மனச் சுமையை தனக்குள்ளேயே சுமந்தபடி மற்றவர்களுக்காக சிரித்தபடி வாழ்ந்து கொண்டு இருக்கிறாள்.



## போராளியின் குருதிச்சுவடுகள்

கரும்புலி

### மேஜர் சிறிவாணி / வண்டு

சின்னத்தம்பி சாந்தி
மட்டக்களப்பு

வீர மலர்வு:- 23 / 11 / 1975
வீரச்சாவு :- 05 / 07 / 2000

அன்று முல்லை மாவட்டத்தில் ஏற்பட்ட எதிர் பாராத வெடிவிபத்தின் போது:-

பங்குபற்றிய தாக்குதல்கள்:-

சிங்கபுர
கொழும்பு வீதி
வாகரை
கல்லிச்சை வடமுனை
மாஓயா
மண்முனை
பொலநறுவை
பூநகரி (தவளை நடவடிக்கை)
முல்லைத்தீவு (ஓயாத அலை 01)

கரும்புலியாகிய பின்:-

தாண்டிக்குளம், ஆனையிறவு (01-02-98)
மணலாறு, இயக்கச்சி, முகாவில்

வேவுப் பணியில் ஈடுபட்ட இடங்கள்:-

பூநகரி, முகாவில்
பேசாலை
வெற்றிலைக்கேணி
மண்டைதீவு
கறுக்காய்த்தீவு

சூரியக்கதிர்
(நடவடிக்கை நடந்த இடம் அனைத்தும்)

சத்ஜெய
(நடவடிக்கை நடந்த இடம் அனைத்தும்)

இராணுவங்கள் செய்யும் அநீதிகளுக்குப் பயந்து இப்படியெல்லாம் நடந்துவிட்டதே என்று நொந்து போகாமல், வேதனையை தந்தவர்களையே வேக வைத்துவிட துடித்துக் கொண்டு இருந்தாள் அந்த உன்னதமான போராளி.

''வண்டு'' அவளை இப்படித்தான் செல்லமாக எல்லோரும் அழைத்துக் கொள்வார்கள். அது அவள்ற்குப் பொருத்தமாக வைக்கப்பட்ட காரணப் பெயர் சின்ன உருவம், திரு திருவென விழித்தபடியும், சுறுசுறுப்பாக அங்கும் இங்கும் ஏதாவது ஒரு வேலை செய்து கொண்டும், துடியாட்டமாய் திரிகின்ற அந்த குறும்புக்காரியின் செல்லப் பெயராக அது நிலைத்துவிட்டது. இப்போதெல்லாம் அவள் வண்டக்கா என்றுதான் எல்லோருக்கும் அறிமுகம்.

எல்லாப் போராளிகளையும் தன் சொந்தங்கள் என நினைத்துக் கொள்ளும் அவள் சண்டையில் அல்லது மற்ற எந்தச் சூழ்நிலை என்றாலும் ஒவ்வொரு போராளிகளையும் அவதானமாகவும், அன்பாகவும் பார்த்துக் கொள்வாள். அவளின் வாழ்க்கையே அதிகம் வேவு நடவடிக்கைகளிலேயே கழிந்தது. வேவு எடுக்கின்ற நாட்களிலும் அவளின் துடியாட்டத்திற்கும், கலகலப்பிற்கும் குறைவே இல்லை.

இரவு வேவிற்குச் செல்வதற்கு முன் ஓய்வாக கிடைக்கின்ற சிறு நேரத்திற்குள்ளும் எதிரியின் பிரதேசத்திற்கு அருகில் இருக்கிற குளம் ஒன்றிற்குச் சென்று தாமரைக்கிழங்கு தோண்டிக் கொண்டு வந்து அதைச் சுட்டு எல்லோருக்கும் கொடுத்து சாப்பிட்டு மகிழ்வதில் அவளுக்கோர் திருப்தி. தாமரைக் கிழங்கிற்காகச் சென்றால் இராணுவத்தின் பதுங்கித்தாக்கும் அணியோ, அல்லது வேவு அணியோ அவர்களைக் கண்டு தாக்கும் சந்தர்ப்பங்கள் இருந்தாலும் அதை முறியடித்து அந்தக் கிழங்குகளை எடுத்து வந்து சாப்பிடுவது அவளிற்கு ஒரு சவாலைப் போல விளையாட்டாகவே நினைத்து தோழிகளையும் அழைத்துக் கொண்டு மீண்டும் மீண்டும் அதையே செய்வாள்.

இருளே இல்லாத நிலவு நாட்களில் கூட வேவிற்காக அவள் சென்று வந்திருக்கிறாள். வேவு பார்ப்பது, பாதை எடுப்பது இப்படி எதுவென்றாலும் அவளும் அந்தப்பணிகளில் ஒருத்தியாக முன்னிற்பாள். சரியான துணிச்சல்காரி, எல்லாவற்றையும் விட அவளிற்குள்ளேயே குமுறுகின்ற தேசப்பற்று, அதை விரைவாக வென்றுவிட வேண்டும என்கின்ற ஆர்வம், நினைத்ததை உறுதியாக செயற்படுத்திவிட வேண்டும் என்கிற தீவிர எண்ணம், எல்லாம் தான் அவளை அவளின் பக்கத்தில் வேகமாக்கிக் கொண்டிருக்கிறது.

மட்டக்களப்பில் இருந்து தாக்குதல் அணிகள் யாழ்ப்பாணம் நோக்கி நகர்த்தப் பட்ட போது இவள் வேவு அணியோடு இணைந்தே வந்திருந்தாள். மட்டக்களப்பின் காட்டுப் பாதைகள் வழி எம்-70 துப்பாக்கியை தோளிலே சுமந்தபடி அலைந்து திரிந்த அவளது பாதங்கள் பல களத்திலும் கலந்து கொண்ட அவளின் கால்கள் யாழ் களமுனைகளிலும் நடந்தன. யாழ்ப்பாணத்தை வந்து சேர்ந்த ஆரம்ப நாட்களிலேயே தான் அவள் கரும்புலியாக வேண்டும் என்ற விருப்பத்தை தலைவருக்கு தெரிவித்திருந்தாள்.

**- துளசிச்செல்வன் -**

ஒருநாள்...

இவள் நின்ற முகாமிலே அணிகள் ஒன்றான போது சிறு பிரிவாய் இன்னுமொரு அணியும் ஒன்றாகி இருந்தது. 'வண்டு' அருகில் நிற்பவர்களிடம் இரகசியமாக கேட்டு அவர்கள் எந்த அணியினரென அறிந்து கொண்டாள். அவர்கள் தான் கரும்புலி அணிக்கு தெரிவாகி இருப்பவர்கள் என்று அறிந்ததும் உடனேயே அந்த அணியோடு தானும் சேர்ந்து கொள்ள வேண்டும் என்று துடித்துக் கொண்டு இருந்தாள். அவள் நெஞ்சிற்குள் நெடு நாட்களாக பூட்டி வைத்திருக்கும் இலட்சியம் அதுதானே. ஆனால், அவளது வேண்டுதல்களை அப்போது யாரும் ஆதரிக்கவில்லை. மிகச்சிறிய தோற்றம். சண்டைகளில் முதிர்ச்சி பெறாத நிலை இப்படி எவ்வளவோ காரணங்களைக் கூறினாலும் அவள் கேட்பதாக இல்லை.

''கரும்புலியாய்ப் போய் நிறையச் சாதனைகள் செய்யவேணும்'' இந்த உறுதியில் சிறிதும் குறையாது இருந்தாள். அன்றில இருந்து தலைவரின அனுமதியைப் பெற்று ஆரம்பமான அவளின் கரும்புலியான பணிகள் பல களங்களிலும தொடர்ந்தன.

அனைத்து ஆயுதங்களையும் சிறப்பான முறையில் கையாளக் கூடியவளும் சிறந்த நீச்சல் காரியாகவும் திகழ்ந்த சிறிவாணி அதிகமான களங்களிற்கு 'லோ'வுடனேயே சென்றுவந்தாள்.

''நான் எல்லாப் பொய்சனிலும் இருந்தும் 'லோ'வால அடிச்சிட்டன்'' இப்படிக் கூறினா



www.eelamview.com

www.eelamview.com





லும் அவளும் அந்த ஆயுதமும் நிறைய தேசத்திற்கு செய்து காட்ட வேண்டும் என்ற இலட்சிய வேட்கை அவள் வார்த்தைகளில் யாருக்கும் தெரியாமல் மெல்லியதாய் இழையோடும்.

கரும்புலியாய் இணைந்து இலக்குத் தேடி அலைந்த நாட்களில் ஆனையிறவு தளத்தினுள் இலக்கிற்காக வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தாள்.

மிக நெருக்கமாக அமைக்கப்பட்டிருக்கும் வெற்றிலைக்கேணி இராணுவ முன் அரங்கநிலைகளை ஊடுருவி மணல் பிரதேசத்திலும் கால் தடம் படாது நடந்து சென்று சின்னச்சின்ன நாவல் மரங்களையும் கன்னாப்பற்றைகளையும் மறைப்பாக்கி மணல் திட்டுகளில் மறைவாகத் தங்கி இருந்து, கொண்டு சென்ற சிறிதளவு தண்ணீரையே கொஞ்சம் கொஞ்சமாய் குடித்து, நாக்கு நனைத்து உலர் உணவுப் பைகளோடே ஐந்தாறு நாளின் பசிப் பொழுதுகளைப் போக்கி, இராணுவ முகமிற்குள்ளேயே இருந்து வேவுத் தகவலகளைத் திரட்டி மீளுகின்ற சிரமமான பணி அது.

சிறிவாணிக்கு அந்தப் பணியே நன்கு பிடித்திருந்தது. மண்ணிற்காக சுமந்து கொள்கின்ற ஒவ்வொரு துன்பங்களும் இன்பமானவைகள் தானே சுமைகளை சுகமாக நினைத்த பின் சுமப்பது அவளிற்கு சிரமமானதாக இருக்கவில்லை.

அந்த ஆனையிறவின் வேவிற்காக அலைந்த நாட்களில் ஒருநாள் முன்னரங்குகளால் ஊடுருவி உள்நுளைந்த போது எதிரி விழிப்படைந்து விட்டான்.

அவர்கள் முன்னணி நிலைகளில் இருந்து, சில காலடி தூரம் நடந்திருப்பார்கள் காவலரண்களில் இருந்து செறிவான சூடுகள் அவர்களை நோக்கி வந்தன. நிதானித்து எதிர்ச் சூடுகளை வழங்கி நிலைமைக்கு ஏற்றவாறு நிலையெடுத்துக்கொள்ள நேர அவகாசம் இருக்கவில்லை. எதிர்பாராத இந்தத் தாக்குதலினால் அணி நிலைகுலைந்து போயிருந்தது.

தாக்குதலிற்கு எதிர்ச் சூடுகளை வழங்கியபடி இவளும் இன்னும் இரு போராளிகளும் சற்றுத்தூரம தள்ளி நிலையெடுத்திருந்தார்கள். அவர்களில் ஒரு தோழிக்கு காலில் ரவைபட்டிருந்தது. அவளால் காலை எடுத்து நடக்கவோ அசைக்கவோ முடியாது இருந்தது. பல தடவை முயற்சி செய்து பார்த்தாள் அதுவும் பலன் அளிக்கவில்லை.

இந்த களச்சூழலில் அணியின் மற்றவர்களை தேடுவதற்கும் எதிரியின் நிலைகள் எங்கெங்கே இருக்கின்றன என்பதைக் கண்டறிவதற்கும் சிறிவாணி தனித்து ஒருத்தியாகவே செயற்பட வேண்டியிருந்தது. எந்தவித தயக்கமும் இல்லாது கடும் சிக்கல் நிறைந்த இராணுவப் பிரதேசத்தினுள் தன் தேடுதலை நடத்தி இன்னுமொரு போராளியையும் கண்டுகொண்டாள்.

அதன் பின்னும், அங்கே நிற்பவர்கள் ஒவ்வொருவரது செயற்பாடும் மிக முக்கியமானதாய் இருந்தது. இராணுவப் பிரதேசத்தைக் கடந்து விழுப்புண் பட்ட போராளியை கவனமாகக்கொண்டு சென்று சேர்க்க வேண்டும்.

ரவை பட்ட காயம் காலில் பெரிதான சிதைவை ஏற்படுத்தி இருந்தது. எலும்பை உடைத்து தசைகள் வெளியே தெரிய ரத்தம் கசிந்து கொண்டிருக்கும் அந்தப் புண்ணுடன் எழுந்து நடக்கமுடியாது தவழ்ந்து செல்வதென்றாலும் தவழ்கின்ற போது காயப் பட்ட அந்தக் காலை வெப்பில் கொடிகள் பிய்த்திழுக்கும். தடிக்குச்சிகளும் மண்ணும் காயத்தோடு உரசி வேதனையை இன்னும் அதிகமாக்கும். ஒவ்வொரு தடவையும் காயம் பட்ட அந்தப் போராளி தவழ்கின்ற போதும் அவளுடன் வரமறுக்கின்ற காலை கையால் இழுத்தபடி நகரும் அந்தப் போராளியின் நிலை வேதனையாய் இருந்தது.

சிறிவாணி அந்தப் போராளிக்காக தானும் அந்தப் போராளியைப் போலவே தவழ்ந்து வந்தாள் தோழியின் கால் சிக்குப்படுகின்ற நேரங்களில் அவற்றில் நோவேற்படாது பக்குவமாக தூக்கி விட்டபடி தொடர்ந்தாள். காயப்பட்ட போராளியின் ஆயுதமும் வேறு பொருட்களும் சேர்ந்து சிறிவாணிக்கு பாரம் அதிகமானாலும் அவள் மற்றவர்களிற்காக உதவுகின்ற செய்கையில் இருந்து தளரவில்லை, அந்த மணற் பிரதேசத்தில் அவ்வளவு பொருட்களோடும் காயம்பட்ட தோழிக்காக தவழ்ந்து வருவது அவ்வளவு சுலபமானதாக இருக்கவில்லை.

பெருங்கடலுக்குள் இறங்கி நகரத் தொடங்கிய போது இவளின் குறைந்த உயரம் இடை இடையே தண்ணீரில் மூழ்கி எழத்தான் செய்தது.

இரவிரவாக தண்ணீருக்குள்ளால் நகர்ந்து கரையை வந்தடைந்த போது காயப்பட்ட போராளி நினைவிழந்து இருந்தாள்.

எல்லோரதும் விறைத்த உடலும் குளிர் காற்றில் நடுங்கிக்கொண்டு இருந்தது. இன்னும் அவர்கள் போய்ச்சேர வேண்டிய தூரமோ அதிகமாய் இருந்தது காயப்பட்ட போராளிக்கு முதலுதவி செய்ய வேண்டும். நிலைமையை உடன கட்டளைமையத்திற்கு தெரியப்படுத்த வேண்டும். தொலைத் தொடர்பில் அறிவிப்பதற்கு தொலைத்தொடர்பு சாதனம் தண்ணீர் பட்டதால் செயலற்றுப் போயிருந்தது ஆனால் இன்னும் சிலமணித்துளிகளில் விரைவாக செயற்படாவிட்டால் சக தோழியின் நிலை ஆபத்தாகி விடும் என்பதை அந்தச் சூழல் தெளிவு படுத்திக் கொண்டிருந்தது.

இந்தத் தகவல்களைச் சொல்லி உடனே முதலுதவிக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருந்தது. இத்தனை உடற் சோர்வுகளோடும் சிறிவாணி தான் அந்த நீண்ட தூரத்தை விரைவாய் ஓடிச் சென்றடைந்து நிலைமையைச் சொல்லி மற்றவர்களையும் அழைத்துக்கொண்டு வந்து உரிய நேரத்தில் உதவினாள்.

இப்படி எந்த நேரத்திலும், சோராதவள், எவ்வளவு இறுக்கத்திலும் சளைக்காதவள், தேசவிடுதலையென்ற ஒன்றையே மூலதனமாக்கி இயங்கிக் கொண்டு இருப்பவள், மற்றவர்களின் துன்பங்களிற்காக வருந்துவதோடு மட்டுமல்லாமல் அவற்றின் காரணங்களைத் தீர்ப்பதற்கு உழைத்துக் கொண்டு இருப்பவள் அதனால் தானே தனக்குள் எவ்வளவு வேதனைகள் இருந்தாலும் மற்றவர்களின வேதனையை துன்பங்களைப் போக்குவதற்கு போரை விரைவாய் முடித்து விட வேண்டும் என துடித்துக்கொண்டு இருக்கிறாள்.

ஆனையிறவு களத்திற்கு அவளோடு களமாடச் சென்றவர்கள் திரும்பவில்லையே என்ற ஏக்கம் நெடுநாளாய் நெஞ்சுக்குள் உறங்காமல் இருந்தது.

அவர்களை பிரிந்து அவள் சாதனை புரிந்துவிட்டு வந்திருந்த நாட்களில் அவளின் முகத்தில் மலர்ச்சியே இருக்கவில்லை. சோகம் சூழ்ந்து வாடிப்போய் இருக்கும். ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து பூப்பறித்து வந்து மாலை தொடுத்து அவர்களுக்குச் சூட்டிய பின்னர் தான் வழமையான பயிற்சிப்பணிகளில் ஈடுபடுவாள்.

பலவர்ணப் பூக்களிலும் மாலை மிக அழகாகக் கட்டுவாள். தன் கூடவே இருக்கின்ற போராளிகளுக்கும் மாலை கட்டிப் பழக்குவாள். (இப்போது அவள் மாலை கட்டப் பழக்கிய தோழிகள் அவளின் திருவுருவப்படத்திற்கு மாலை சூடுகின்றார்கள்.) அந்தத் தோழிகளின் நினைவிலேயே மூழ்கியிருப்பவள் நெஞ்சுக்குள் விடுதலைக் கனவின் கனதி இன்னும் அதிகமானது.

அவள் நினைத்து வந்த இலட்சியத்திற்காக உழைக்கவேண்டும். கூடவே அவளோடு களமாடிப் போனவர்களின் விடுதலைக் கனவையும் சுமக்க வேண்டும். அதற்காகத்தான் ஒவ்வொரு சண்டைகளிலும் தவறாது பங்கெடுத்து விட வேண்டும் எனக் கேட்டுக் கொள்வாள்.

சிறிவாணி கரும்புலிகள் அணியில் இணைந்து கொள்வதற்கு முன்னும் கரும்புலிகள் அணியில் சேர்ந்து செயற்படத் தொடங்கிய நாட்களிலும் அவள் பல சண்டைகளில் ஏராளமான வேவு நடவடிக்கைகளிலும் பங்கு பற்றியுள்ளாள்.

அவள் கரும்புலியாக கலந்துகொண்ட இறுதித் தாக்குதல் பலாலி ஆட்லறித்தளங்கள் மீதான கரும்புலித் தாக்குதலாகும்.

பதினொரு ஆட்லறிகளை தகர்த்து புதியதொரு பரிமாணத்தை ஓயாத அலைகள் மூன்று களப்பகுதியில ஏற்படுத்திய கரும்புலிகள அணியில் சிறிவாணியும்.

அவள் அந்தக் தாக்குதலுக்கு 'லோ' வோடுதான் சென்றிருந்தாள்.

அணிகள் வேகமாக அந்தத் தளப்பிரதேசத்திற்குள் நுழைவதற்கு இவளின் இலக்குத் தவறாத சூடு மிகமுக்கியமானது. கரும்புலி மேஜர். சுதாஜினி வீரச்சாவடைய அந்தக் களத்தில் அவளது பணியை இவளே ஏற்றுத்தொடர்ந்தாள். முதல் பெண் தரைக் கரும்புலி வீரச்சாவடைந்த தாண்டிக்குளச் சண்டை தொடக்கம் கரும்புலிகள் அணி கலந்து கொண்ட அதிகமான தாக்குதல்களில் இவளும் பங்கெடுத்திருக்கிறாள். ஆனால், இந்தக் களத்தில்தான் களம் ஏற்படுத்திய வீரவடுவாககளத்தின் வெடியதிர்வுகள் பாரிய உடற்தாக்கத்தை விளைவித்திருந்தது; காதுகளிற்குள் இருந்து ரத்தம் கசிந்து கொண்டு இருந்தது. உடல் தனது இயல்பான சமநிலையை இழநதிருந்தது. இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது சிறிவாணி தொடர்ந்தும் தன்பணிகளில விரைவானபடியே இருந்தாள்.

தனது இருபத்திஐந்து வருடவாழ்க்கையில் பத்து வருட வாழக்கையை போராட்டத்தில சழித்தவள். அவளிற்கு இந்தக்களச் சூழல் புதிதானதாக இருக்கவில்லை. களத்தில் ஒவ்வொரு அங்குலத்தையும் நுட்பமாக அறிந்து வைத்திருந்தாள். ஒவ்வொரு களங்களிலும அவள் செல்லுகின்ற போது வீரத்தின புதிய அததியாயம் ஒன்றை துறந்துவிட்டே வருதாள.

அவளது களவாழ்க்கையில் ஐந்து வருடங்களை கரும்புலியாய் கடந்தவள். நீண்ட நாட்களாக அவளின் (கரும்புலிக்கான) இலக்கிற்கான காத்திருப்பு அதற்காக அவள் பெற்றுக கொண்டிருந்த கடுமையான பயிற்சிகள் எல்லாமே அவளிற்குள் இருந்த வைரமான உறுதியை வெளிக்காட்டின.

"நிறையச் செய்ய வேணும், தேசம் எதிர்பார்ப்பது போல சாதிக்கவேணும அதற்குப் பிறகுதான கதைக்கவேணும."

இதுதான் அவள் தனது அடக்கமான வீரத்திற்கு கூறுகின்ற முன்னுரைகள். அவள் தன்னைப் பற்றி தான் சென்ற தாக்குதல்கள் பற்றியாரோடும் பேசியதில்லை கூட இருந்தவர்களைப் பற்றியே எப்போதும் பேசிக் கொள்வாள்.

(11ம் பக்கம் பார்க்க)



www.eelamview.com

www.eelamview.com



# வேதனைகளை வெல்லும் பெருமையும் தந்து...

- அகிலன் -

மென்சிகப்பு மேனியாய் விரிந்து சென்றது அந்த அழகிய மண்வீதி. புழுதி கிழப்பி மனிதர்களை சினமூட்டும் வாகனப் போக்குவரத்து நிறைந்த புதுக்குடியிருப்பு பரந்தன் சாலையிலிருந்து விடுதலை பெற்றபோது, ஆரவாரமின்றி எம்மை அழைத்துச் சென்றது அந்த மண்வீதி மனதிற்கு இதமூட்டினாலும், கோடையின் கோரவெய்யில் மேனியை அகோரமாய் சுட்டெரித்தது. சிங்கள அரச பயங்கரவாதப் பேய்கள் நரபலியெடுத்த அந்த சுதந்திரபுரம் கிராமம்இப்போதும் தாங்கி நின்ற கோரவடுக்களை அருகில்வந்த என் நண்பன் ஞாபகமூட்டியபோது அவை ஆயிரம் சூரியன்களின் வெம்மையை என்னுள் இறக்கி மனதை வெதுப்பத் தொடங்கின.

நானும் நண்பனும் அந்தக் கிராமத்தின் அந்தத்தில் மு சுதந்திரபுரம் கனிஸ்ட உயர்தர வித்தியாலயத்தின் அருகிருக்கும் சிறிய மண்குடிசை ஒன்றைநோக்கிப் போய்க் கொண்டிருந்தோம். 09 / 09 2000 அன்று யாழ் குடாவில் எதிரி தொடுத்த கொடுமையான யுத்தகளமொன்றினுள் நின்று சமாடி, எதிரியை புறமுதுகிட வைத்து. எம்மினத்தின் வீரமாபிற்கு புகழ் சேர்த்தவர்களுள் எமக்கு அறிமுகமான ஒரு மாவீரனின் இல்லம் அது.

வீரவேங்கை செங்கொடி (வேலாயுதம்பிள்ளை - கேசவன்) அவனது அம்மாவும் ஆசை அக்காவும் கண்ணீருடன் எங்களை வரவேற்றபோது. இனப்பற்றும், துடிதுடிப்பும், பொறு புணர்வும் நிறைந்த அவர்களின் சொத்தான அந்த வீரன் என் கண்களுக்குள் நின்றான்.

கேசவனுக்கு இன்னுமிரு தம்பிமார் அருகிலிருக்கும் பாடசாலைக்கு போய்விட்டார்கள். அவனது அப்பா தன் குடும்பப்பாரம் சுமக்க சவூதிநாட்டு பாலைவன வெளியில் ''நெருப்புத்திண்டு'' உழைப்பதாக அம்மா சொன்னாள் 1994ம் ஆண்டளவில் பத்திரிகையில் வெளிவந்த, அவர்களது தூரத்து உறவினனான லெப். கேணல் அன்புவின் உருவப்படம் செவ்வாத்தம் பூக்கள் அலங்கரிக்க, அந்த மண்சுவரில் இப்போதும் பக்குவமாய் ஒட்டப்பட்டிருந்தது அருகில் நிமிர்ந்து கம்பீரமாய் அம்மாவின் வீரமகன் வரிப்புலிச் சீருடையில் தேசத்தின் பிள்ளையாய் நின்ற படம் உயிரோட்டமாய் அவனை நினைவுபடுத்தியது தன் மனதை வேகவைக்கும் தன் பிள்ளையின் நினைவுகளை அம்மா மீட்கத்தொடங்கினாள்.

அது இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் வெறியாட்ட காலம் அப்போது கேசவன் ஐந்துவயதுக் குழந்தை வற்றாப்பளை அம்மனின் பொங்கலுக்கு போனவன் விளையாட்டுத் துவக்குக்காய் அப்பாவிடம் அடம்பிடித்து வாங்கினான் வரும்வழியில் சோதனைக்காய் மறித்த சிப்பாய் ஒருவன் கேசவனின் நெஞ்சில் துப்பாக்கியை வைத்தபோது அம்மாவும். அப்பாவும் விறைத்துப்போய் நிற்க, தன் விளையாட்டுத் துவக்கை அந்தச் சிப்பாய்க்கு நேராய் நீட்டி ' நீ சுட்டா நானும் சுடுவன்'' என்று அவன் சொன்னதை அம்மா இப்போது சொல்லும் போதும் நடுங்கினாள். சின்னஞ்சிறு வயதில் அவனுள் இருந்திருந்த அந்த உணர்வு எங்களுக்கு வியப்பைத் தந்தபோது இந்திய இராணுவம் அவனின் அப்பாவையும் அயலவர்களையும் பிடித்துச்செல்லும் போதெல்லாம் தான் கேசவனையும் தூக்கிக்கொண்டு அழுதபடியே அலைந்து திரிவதாய் அம்மா சொன்னாள்.

சிறுவயதுமுதலே அவன்கண்ட அவலங்கள், அர்ப்பணிப்புக்கள் எல்லாம் அவனை பொறுப்புணர்வுள்ள மனிதனாய் மாற்றியது. அதன் விளைவு படிப்பு. விளையாட்டு, பொது நிகழ்வுகள் எல்லாவற்றிலுமே அவனை முதன்மையடைய வைத்தது அவன் எல்லாத் துறைகளிலும் பெற்றுக்கொண்ட தொகையான சான்றிதழ்களை அம்மா பத்திரமாய் வைத்திருந்தாள்.

கேசவன் குட்டிப் பெடியனாய். அரைக்காற்சட்டையுடன் தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரத மேடையில் ஏறி அழுதழுது கவிதை வாசித்ததையும், அவனது உருக்கமான வரிகளுக்கு அனைவரும் வசப்பட்டு நின்றதையும் அனுபவித்தவர்களே சொன்னபோது அவனுள் இருந்த உணர்வுப் பூகம்பத்தை புரிந்துகொள்ளமுடிந்தது. இறுதியாய் பொறுமையிழந்து தானும் போராட வேண்டுமென இயக்கத்திற்கு போவதற்காக கேசவன் எவ்வளவு பாடுபட வேண்டியிருந்தது என்பதை அம்மா கண்ணீர்ததும்ப பெருமையுடன் நினைவுகூர்ந்தாள்.

1998 இல் கேசவன் தன் நாட்டிற்காக முதன்முதலில் வீடுவிட்டுப் புறப்பட்டான். ஆனாலும், அவனுக்கு அதற்கான வயது வந்திருக்கவில்லை அவன் இயக்கத்தால் வீட்டிற்கே திருப்பிவிடப்பட்டான் பொய்யாக வயதை சொல்லியாவது தான் ஒரு போராளியாக மாறிவிட வேண்டுமென்ற தவிப்போடு இருந்தவன், தன்னை இனங்காணதபடியிருக்க இயக்கத்தில் வெவ்வேறு முகாம்களுக்குப் போய் தன்னை இணைத்துக்கொண்டான் இப்படி மூன்று தடவைகள் அவன் தன் உறவுகளை பிரிந்து போராட்டத்திற்காய் போனானாம் ஆனால் அவனை திரும்பவும் திரும்பவும் வீட்டிற்கே அனுப்பிவைத்தது இயக்கம். கேசவன் நான்காவது தடவையாக இயக்கத்திற்கு வந்தபோது அவன் வயதுத் தகுதிபெற இன்னமும் ஒரு மாதம் கழியவேண்டியிருந்தது. அப்போது தன்னையும் பயிற்சி முகாமிற்கு ஏத்தும்படி அடம்பிடித்தவனிடம் ''வேணுமெண்டால் இயக்கத்தில இருந்து ஒரு வருடத்திற்கு படி பிறகு எடுக்கலாம்'' என பகிடியாகச் சொன்னபோது. ''படிக்கிறதுக்கு நான் படிப்பை விட்டிட்டு இயக்கத்திற்கு வரேல்லை'' என்றுவிட்டு அவன் அழுதழுது வீடுதிரும்பியது என் நினைவிற்கு வந்தது.

கடைசியாய் வீட்டிற்கு வந்தவன் அம்மாவிடம் சொன்னானாம் ''அம்மா எனக்கு போராட வயது காணாதாம். இன்னும் ஒரு மாதம் போனாத்தான் என்னையும எடுப்பினம், எனக்கு நல்ல சத்தான சாப்பாடு சமைச்சுத்தாண அம்மா ' தன் மகன் விட்டுச்சென்ற அந்த வேதனை நினைவை சகிக்கமுடியாதவளாய் அம்மா அழுதாள். ''நான் பகிடிக்கு சொல்லுறான் எண்டு நினைச்சன் தம்பி அவன் எந்தவித மாற்றமும் இல்லாமல் வழமை போலவே ஆர்வமா படிச்சான், விளையாட்டு, நிகழ்ச்சிகள் எண்டு ஓடியாடித்திரிஞ்சான். அதால நான் அவன் சொன்னதில அக்கறைப்படேல்ல. ஆனா, அவன் சொன்ன மாதிரியே தன்ர அடுத்த பிறந்தநாளை ஒரு மாதத்தால முடிச்சுககொண்டு போட்டான்'' அம்மாவின் கண்கள் கண்ணீர் சொரிந்தன தேசம் காக்கும் கடினமான யுத்தகளமொன்றிலிருந்து ''அம்மா வீட்டிலிருக்கும்போது நாலு கோப்பை சாபபிடுவன் இப்போது ஒரு கோப்பையே சாப்பிடப் பசிக்காது'' என்று அவன் பின்னர் எழுதிய கடித வரிகள்தான் அம்மாவின் நினைவில்நின்று வேதனையைக கிழறியபடியே இருந்தன.

தன் வீரமகனின் நினைவுகளால் வேதனைப்படும் வேளைகளிலெல்லாம் தனக்கு ஆறுதலளிக்கும் தன் மகனின் சொத்தொன்றை பெருமையாய் வைத்திருந்தாள் அம்மா. களத்திலிருந்து தன் வீரமகன் எழுதிய அந்தக் கடிதத் தாள்களை பொலித்தீன் பைகளை விலக்கி பத்திரமாய் எடுத்து நீட்டினாள் அம்மாவிற்கு ஆறுதளிக்கும் அந்த மகனின் வரிகளைப் படிக்கத் தொடங்கினேன்.

''அம்மா! இப்போது நானிருக்கும் இடம் சாவகச்சேரி. கல்வயல் முன்காவலரணிலிருந்து இக்கடிதம் எழுதுவதற்கு சிலநாட்கள் முன்புதான் இராணுவம் எமது நிலைகள் ஊடாக முன்னேற்ற நடவடிக்கையை மேற்கொண்டது. என்னோடு பயிற்சி எடுத்த பல போராளிகள் வீரச்சாவு. அன்று அதிகாலை 5 மணிக்கு பல்குழல் பீரங்கிகளின் செல்வீச்சை ஆரம்பித்தவன் ஏழுமணிக்கெல்லாம் 'பவள்', 'ராங்'குகளுடன் முன்னேறி வந்தான். எதிரியின் செல்வீச்சிலே என் பொயின்ரில் வோக்கியோடு எமக்குப் பொறுப்பாக நின்றவர் காயப்பட்டுப்போய்விட்டார். நானும் என்னோடு இன்னுமொரு போராளியும் எல்லைப்படை ஐயா ஒருவரும் தான் அவன் முன்னேறி வந்தபோது நின்றோம்.

''எமக்கு 75 மீற்றரில் 'பவள்' போகும்போது நானும் அந்த ஐயாவும் எமது ரவை முடியும்வரை அசையாது நின்று போரிட்டோம். முடிந்தவுடன் அப்பொயின்ரை விட்டு வெளியேறி பக்கத்துப் பொயின்ரிற்குச் சென்றோம் அவர்களும் வெளியேற ஆயத்தமாகிக்கொண்டிருந்தார்கள். அவர்களுடன் அடுத்த பொயின்ரிற்குச் சென்று அங்கிருந்த பொறுப்பாளருடன் சேர்ந்து தாக்குதலை ஆரம்பித்தோம். அங்குவந்து சேர்ந்த ஐந்து நிமிடங்களில் நாங்கள் வெளியேறிய பொயின்ருகளுக்கு இராணுவம் வந்துவிட்டான். எம்மோடு நின்ற பலர் காயப்பட்டுவிட்டனர். சிலர் காயப்பட்டவர்களுக்கு சிகிச்சை செய்தனர் வேறுசிலர். காயங்களுடனும் போரிட்டனர்.

''முன்னேறும்படி உத்தரவு வந்தபோது நானும் வேறுசிலரும் ஒரு அண்ணனுடன் சேர்ந்து தாக்கினோம் அந்த அண்ணனும் காயப்பட்டிருந்தார் அந்தப் பொறுப்பாளர் வோக்கியில் அறிவிக்க எமது செல்கள் வந்துவிழ வந்த எதிரிகலெல்லாம் ஓடிற்றாங்கள். பின் இழந்த பொயின்ரைப் பிடிக்க ஆட்கள் இல்லை. பலர் வீரச்சாவடைந்தும். காயமடைத்தும் இருந்தனர். நானும் சில போராளிகளும் தான் ஒரு காயமும் படவில்லை, சண்டை முடிய பொறுப்பாளரும் வேறுபலரும் திறமையாக சண்டைபிடித்தாயென்று என்னைப்பாராட்டினர். அம்மா என்னை எண்ணி கவலைப்பட வேண்டாம்.''

எனது கண்கள் கடிதத்தின் ஒவ்வொரு வரியையும் கடந்து சென்றபோது அம்மாவின் கண்கள் என்முகத்தில் எதையோ தேடியபடி இருந்தன. அம்மாவின் மனது பெருமையால் நிமிர்வதாய் உணர்ந்தேன். மீண்டும் அதே களத்தில்மூண்ட மற்றுமொரு பெருஞ்சமரில் தன் வீரமகன் வீழ்ந்தபோது எப்படியெல்லாம் போரிட்டிருப்பான் என்று அறியும் அவாவுதலுடன் இருந்தாள் தன்னிடம் வரும் போராளிகளிடமெல்லாம் அம்மா அதையேதான் கேட்பாளாம். தன் வேதனைகளை வெல்லும் பெருமையையும் கூடவே தன்மகன் தன்னுள் விட்டுச்சென்றதாய் அம்மா உணர்கிறாள். தன் புதல்வனின் நினைவுகளால் துன்புறும்போதெல்லாம் அந்தக் கடிதத்தையே அம்மா திரும்பத்திரும்ப படிப்பாளாம்.



www.eelamview.com

www.eelamview.com



( 05 ம் பக்கத் தொடர்ச்சி )

## உள்ளத...

மகத்தான பங்கு பற்றல் பற்றியும் எழுதும் போது பிரெட்ரிக் ஏங்கல்ஸ் வருமாறு சுட்டிக்காட்டுகின்றார். 1871ம் ஆண்டில் பிரான்சிற்கும் பிரஸ்யாவிற்கும் (தற்போதைய செருமனி) நடைபெற்ற போரில் பின்னடைவு கண்ட பிரான்சு பற்றி அவர் எழுதுகையில் ''ஆழ்ந்த தேசப்பற்று பிரான்சுக்காரர்களுக்கு இருந்திருக்குமேயானால் ஒவ்வொரு நகரமும ஒவ்வொரு கிராமமும் கோட்டையாக மாற்றப்பட்டிருக்குமேயானால் ஒவ்வொரு விவசாயியும் ஒவ்வொரு குடிமகனும் போராளியாகியிருந்தால் செருமனியரின் கதி என்னவாகியிருக்கும்?

தம்மைவிட பன்மடங்கு வலுமிக்க எதிரிகளான பிரான்சியரை, அமெரிக்கரை எவ்விதம் ஏழ்மையும் எளிமையும் ஆனால் வீரமும் கொண்ட வியட்னாமியர் வென்றார்கள்? கோசிமின் கூறுகிறார்; ஒவ்வொரு குடிமகனும் ஒரு திறமிக்க போராளியாக வேண்டும். ஒவ்வொரு கிராமமும் வட்டாரமும் தெருவும் அரணாக மாற வேண்டும். ஒவ்வொரு கூட்டுப்பண்ணையும் தொழில் நிறுவனர்களும் மக்கள் யுத்தத்தின் விநியோக ஆதாரதளங்களாகமாறவேண்டும். இவ்வாறாக நாம் நம் நாடு முழுவதையுமே பெரும் போர்க்களமாக மாற்றி எந்த ஆக்கிரமிப்பாளரையும் அழித்துவிடமுடியும். இதன் விளக்கமென்ன? வியட்நாமின் நிரந்தரப்படைக்கு துணையாக மக்களில் பிரதேசப்படைகள், குடிபடைகள், தற்காப்பு படைகள் கரந்தடி அணிகள் (இவை கிராமங்கள், வேலைத்தளங்கள், கூட்டுப்பண்ணைகள் என்பவற்றில் அமைக்கப்பட்டவை) உருவாக்கப்பட்டன. இம் மூவகையும் இணைக்கப்பட்டே மக்கள் படை பரிணமித்தது. மக்கள் யுத்தத்தின் தளபதியான ஜெனரல் கியாப்பின்வார்த்தைகளில் கூறுவதாயின் விடுதலைக்கான அனைத்து பணிகளிலும் மக்களே திடமான அடிப்படை, மக்களின் அரசியல் படைகளே ஆயுதப்படைகளின் திடமான அடிப்படை. மக்களின் ஆயுத படைகளே விடுதலைபடையணியின் திடமான அடிப்படை.

அன்று ஜெனரல் கியாப் உறுதியான நம்பிக்கை கொண்டது போலவே எம் தலைவனும் கூறுவது இதுதான் நமது அன்பிற்குரிய தமிழீழ தாயகத்தின் விடுதலையை எம்மக்கள் என்றென்றும் கட்டிக்காப்பர். இவ்வழகிய நேசத்தை எம்மக்கள் என்றென்றும் பாதுகாப்பர்.

O

( 03 ம் பக்கத் தொடர்ச்சி)

## பொங்கு...

சாங்கத்துடன் பேசவும் தயார் என அறிவித்த புலிகள் இயக்கம் பேச்சுக்கு முதற்படியாக கடந்த டிசம்பர் 24 ம் திகதியிலிருந்து அது கடைப் பிடித்து வரும் போர் நிறுத்தமும் இந்த மக்கள் எழுச்சிக்கு உந்துசக்தியாக இருந்தது.

புலிகளின் நல்லெண்ணச் செயற்பாட்டிற்கு அனுசரணையாக, இன்றுவரை, சிங்கள அரசு செயற்பட வில்லை. தொடர்ந்தும், போர்வெறிக்கும் இனவாதத்திமிருடனேயே அது நடந்துவருகின்றது.

புலிகளின் போர்நிறுத்தத்தை ஏற்று சிங்கள அரசும் யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடித்து புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தையில் உடனடியாக இறங்கவேண்டும் என்று வற்புறுத்தியும், தமிழரின் அரசியல் அபிலாசைகளான தாயகம், தேசியம், தன்னாட்சி என்பன பேச்சிற்கான அடிப்படைகளாக அமையவேண்டும் என்று வலியுறுத்தியும் பொங்குதமிழ் எழுச்சி அமைந்திருந்தது.

அலைபோல்தொடர்ந்து, தமிழர் தாயகம் எங்கும் நடந்த இந்த எழுச்சி நிகழ்வுக்கு ஆதரவாக தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து குரல் கொடுத்திருப்பது தமிழர்களின் அரசியல் கோரிக்கைகளை மேலும் வலுபபடுத்தியுள்ளது.

ஈழத்தமிழர்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் இயக்கம் தான் என இந்தத் தமிழ்க் கட்சிகள் ஒப்புக்கொண்டு அதைப் பகிரங்கமாக அறிவித்திருந்தன. முக்கியத்துவத்தைப்பெற்ற இந்த அரிய நிகழ்ச்சி சிங்களப்பேரினவாதிகளை அதிர்ச்சிக்கும், சீற்றத்திற்குமுள்ளாக்கியுள்ளன.

இதேவேளை தமிழ்க்கட்சிகளின் இந்த அறிவிப்பானது தமிழர் நிலத்தின் அரசியல் யதார்த்தத்தை உலகசமூகத்திற்கும் உணர்த்தியுள்ளது.

O

( 04 ம் பக்கத் தொடர்ச்சி )

## அரச பயங்கர...

அனுமதிக்கப்படவேண்டிய நிலையில் சராசரியாக அரைவாசிப் பெறுமதியான உணவு நிவாரணப் பொருட்களே அனுமதிக்கப்பட்டுவருகின்றது.

இவ்வாறு தொடரும் பொருளாதார தடையின் ஒரு கட்டமாக குழந்தைகளுக்கான, பாலூட்டும் கர்ப்பிணித் தாய்மாருக்கான போசாக்கு உணவுப் பொருட்களையும், மருந்துப் பொருட்களையும் குறிப்பாக குழந்தைகளுக்கான பால்மா வகைகளையும் தொற்றுநோய் தடுப்பு மருந்துகளையும் அரசு தடுத்தும் அல்லது மிககுறைவான அளவுகளில் மாத்திரம் வன்னிக்கு எடுத்துவர அனுமதித்தும் வருகின்றது.

தொழில் வாய்ப்பற்று, பொருளாதாரப் பலமற்று தேவையான அடிப்படைப் போசாக்கு பொருட்களைப் பெறுவதற்கான வழியற்றுப் பாதிக்கப்படும் வன்னியின் கர்ப்பிணித் தாய்மாரும் குழந்தைகளும் மிகக்கொடிய போசாக்கின்மைக்கு ஆட்படுவதன் மூலம் தமிழீழத்தின் எதிர்கால மக்கள் சமூகம் வளமற்றதான, நிறைவிருத்தியற்ற, மந்தமான குழந்தைகளை உடையதொரு சமூகமாக மாறுமாறு சிங்களத்தால் திட்டமிட்டு நிர்ப்பந்திக்கப்படுகின்றது.

இந்நிலையில் குழந்தைகளின், கர்ப்பிணிகளின் போசாக்கு மட்டத்தை உயர்த்தும் நோக்கில் வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் ''தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்'' அனுசரணையுடன் அதன் பங்காளி நிறுவனங்களால் ''தாய்சேய் போசாக்கு புனர்வாழ்வு நிலையங்கள்'' நிறுவப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

மிகையான போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிகள் கிராமிய மருத்துவ மாதுகளால் மற்றும் மருத்துவ தொண்டர்களால் இனங்காணப்பட்டு வைத்திய ஆலோசனையுடன் தாய்சேய் போசாக்கு புனர்வாழ்வு நிலையத்தில் இணைக்கப்படுகின்றனர் அங்கே அவர்களது போசாக்கு மட்டம் சரியான நிலையை அடையும்வரை பராமரிக்கப்படுகின்றனர் இவ்வாறு பராமரிக்கப்படும் குழந்தைகள் தமக்கான போசாக்கு மட்டத்தை அடைந்தபின் மீண்டும் வீடுசெல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

பராமரிப்பு நிலையத்தால் கண்காணிக்கப்படும் காலப்பகுதியில் தொழில் வாய்ப்பற்ற, குழந்தைகளையுடைய குடும்பங்களிற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் செயற்படுத்தப்படும் வருமான அதிகரிப்பு திட்டத்தின் கீழ் அன்றாட வாழ்விற்கான சிறுதொழில் முயற்சிக்குரிய உதவிகள் வழங்கப்படுகின்றன. புதுக்குடியிருப்பில் மேற்கொள்ளப்படும் இவ் ஊக்குவிப்பு திட்டத்திற்கு மட்டும ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நல அமைப்பு. ( UNICEF ) எனப்படும் சர்வதேச தொண்டர் நிறுவனம் உதவிவருவது குறிப்பிடத்தக்கது. இவற்றின் மூலம் குழந்தைகளைக்கொண்ட குடும்பங்களின எதிர்கால பொருளாதார வருமானம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

இதுவரை வன்னிப் பெருநிலப்பரப்பில் புதுக்குடியிருப்பு மல்லாவி, அக்கராயன் தருமபுரம், பூநகரி என ஐந்து இடங்களில் ''தாய்சேய் போசாக்கு புனர்வாழ்வு நிலையங்கள்'' அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன கடந்த இரண்டாயிரமாம், ஆண்டு மட்டும் அடிமட்ட போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட 250 வரையான குழந்தைகள் இவ் நிலையங்களில் பராமரிக்கப்பட்டுள்ளனர்.

வன்னிமீது எந்தவொரு மருத்துவ, பொருளாதார தடைகளும் இல்லையென தற்போது சர்வதேசத்தின் முன் சாதித்துவரும் சிங்கள அரசு எவ்வாறு வன்னியின் மக்கள் சமூகத்தை - குழந்தைகளை குறிப்பாக அக்குழந்தைகள் கருவில் இருக்கும்போதே போசாக்கின்மைக்கு உட்படுத்தி அவர்களை நலிவடைந்த, பூரண வளர்ச்சியடையாத பரிதாபத்திற்குரியவர்களாக உருவாக்கி வருகின்றது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டியதும், அதற்கெதிராக குரல்கொடுக்க வேண்டியதும் மனிதத்திற்கும் மனிதாபிமானத்திற்கும் போராடும் அனைவரினதும் அவசிய கடமையாகின்றது. அதுவே எமது மக்களின் அவாவும் கூட.

எவ்வாறாயினும், ஆக்கிரமிப்பாளரினது பல்வேறு ஆக்கிரமிப்பின் வடிவங்கள் இன்று எம் குழந்தைகளின் எதிர்காலத்தையும், அவர்களின் உயிர் இருப்பையும் கூட அச்சுறுத்தும்போதும் எம் மக்களின் குறிப்பாக புலம்பெயர்ந்த மக்களின் ஆதரவுடன் செயற்படும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 'தாய்சேய் போசாக்கு புனர்வாழ்வு நிலையங்கள் எம் வருங்கால சமூகத்தின் - குழந்தைகளின் - வாழ்வை காப்பற்றும் நோக்கில் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பாராட்டுக்கும், நன்றிக்கும் உரியவை. எம் தேசத்தின் எதிர்கால நல்வாழ்வு நோக்கிய நம்பிக்கைகளை தோற்றுவிப்பவை.

●

## கரும்புலி...

( 09 ம் பக்கத் தொடர்ச்சி )

ஓயாமல் வீசிக்கொண்டிருந்த இந்தப் புயல் ஓய்ந்துவிடப் போகின்றதை யாருமே எதிர் பார்த்திராத அந்த நாள்.

வழமை போல முகமலர்ச்சியோடு கறுப்பு வரிச் சீருடையோடு எல்லாத் தோழிகளுடனும் சிரித்துக் கலகலத்தபடி இருக்கிறாள். 05 07.2000 அன்று கரும்புலிகள் நாளல்லவா. கூட இருந்தவர்களை நினைத்து அஞ்சலிப்பதற்காய் அந்த மைதானத்தில் கூடியிருந்தார்கள். நிகழ்வோடு ஒன்றிப்போய் எல்லோரையும் போலவே அவளும் மெய்சிலித்துப் போய் இருந்தாள்.

அந்தக் களத்தில்தான் எதிர்பாராத விபத்து அங்கே நிகழ்ந்து விடுகிறது.

சாதாரன காயம் என்றுதான் முதலில் எல்லோரும் நினைத்தார்கள் ஆனால் அவளிற்குத் தெரியும் நெஞ்சில் ஆழமாய் பதிந்து விட்டது காயம் என்று. தன் சாவின் விளிம்பை தெரிந்து கொண்டும் சாதிக்கத் துடிக்கின்ற கரும்புலியல்லவா அவள். சாவு நெருங்கிவிட்டது, அவள் நினைத்தது போல களத்தில் சந்திக்கவில்லையே களத்திலேயே தன்சாவு வரவில்லையே என்ற ஏக்கம் போல முகத்தில் வாட்டமாய் இருந்தது.

விழிகள் எதையோ ஆர்வமாகத் தேடின. அவள் அருகில் நின்ற தோழியிடம் சத்தமற்ற குரலில் ''அண்ணாட்ட செல்லுங்கோ நான் பொய்சன் எடுத்துக் கிடந்துதான் காயப்பட்டனான் என்று .'' அந்த இறுதிக் கணத்திலும் தலைவரிற்கு இறுதியாக இந்தச் செய்தியைத் தான் சொல்லி விட்டாள்.

காயப்பட்டதில் இருந்து அவள் மூச்சு வாழ்ந்த ஒருசில மணிநேரத்திற்குள் அவள் திரும்பத் திரும்ப உச்சரித்த வார்த்தைகள் இரண்டு, ஒன்று அவள் இதயம் முழுவதும் சுமக்கின்ற தலைவனை. மற்றது அவள் பார்க்கத் துடித்த ஆசைத் தம்பியை.

தேசத்தின் வடிவாய் தலைவனை நினைத்தாள். தலைவனின் முகத்தில் தேசத்தைப் பார்த்தாள்.

O



www.eelamview.com

www.eelamview.com



# சிட்டுக் குருவிகளுக்குச் சிறகு முறியாது, மீன் குஞ்சுகளுக்கு மூச்சுத் திணறாது.

## உலைக்களம்

**- வியாசன் -**

"அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே
உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே."
பாரதியே!
எட்டயபுரத்திலிருந்து அன்றிதை
எவருக்கெதிராகப் பாடினாயோ?
அதே அவர்களுக்கெதிராக
ஈழத்திலிருந்து இன்றுன் பேரன் பாடுகிறான்;
தேம்ஸ் நதியே!
ஊற்று நீரை ஒட்ட இறைத்து விட்டு
உன்னிலெப்போது அமிலம் நிறைத்தாய்?
பர்மிங்காம் அரண்மனையின் பளிங்குக்கற்கள்
எப்போது சரளைக் கற்களாயின?
தோலின் நிறம் போலத்தானே உன்னேயும்
பாலின் நிறமென நம்பி
நாங்களின்று ஏமாந்து போனோம்.
அன்று கரும்புக்கும், கறுவாவுக்குமாக
எங்கள் கரையொதுங்கியவர்களே!
இன்று கதிர்காம மேனகையின் களியாட்டத்தில்
தேம்ஸ் நதியே சில்லிட்டுப் போனதா?
கடிக்க வந்தது கருநாகம்
அடித்தோம்.
பாம்புக்குப் பால் வார்ப்பவர்கள்
தடிகளுக்குத் தடை விதித்து விட்டனர்;
பயிரழிக்க வந்தன யானைகள்
வெடி கொளுத்திப் போட்டோம்.
யானைக்குத் தீனி போடுவோர்
வெடி கொளுத்திய கைகளுக்கு விலங்கிட்டனர்.
ஈழத் தமிழரே!
இடிவிழுந்து விட்டதென எண்ணாதிர்.
உணர்ந்து கொள்வீர்
இது ஒப்பாரிக்கான காலமல்ல...
ஒட்டகங்கள் தடைசெய்து விட்டால்
சிட்டுக் குருவிகளுக்கென்ன சிறகா முறியும்?
காண்டாமிருகங்கள் தடைச்சட்டம் போட்டுவிட்டால்
மீன்குஞ்சுகளுக்கென்ன மூச்சா திணறும்?
முதுகிற குத்தவிட்டுச் சிரிக்கிறாயே
நீயுமா புருட்டாஸ்?
குளிர்ச்சுக் காற்று குரல் வைக்கிறது
பூமத்தம் பூவுக்கும் நோப்படக் கூடாதாம்;
பூப்பறிக்கும் போது முட்களுக்கு மூச்சுத்திணறக் கூடாதாம்.
நாங்கள் பயங்கரவாதிகளாய
சொல்லித் திரிகின்றன வெள்ளைக் கொக்குகள்.
சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்ஜியம்
இன்று சுருங்கி விட்டதல்லவா?
அந்தக் கோபம் அவர்களுக்கு.
ஊரையடித்து உலையிற் போட்டவர்களல்லவா
அந்த ராஜதிமிரே அவர்களைப் பேசவைக்கிறது;
கூட்டுக் களவுக்கு வந்த கொள்ளைக்காரர்கள்
பூட்டைத் திறந்து விட்டு பேசாமற் கிடக்கச் சொல்லி
வீட்டுக்காரர்களுக்கே விளக்கம் தருகின்றனர்.
யுத்தமென்பது ரத்தம் சிந்துகின்ற அரசியல்.
அரசியலென்பது ரத்தம் சிந்தாத யுத்தம்.
இரண்டும் எமக்குக் கைவருமென்று
மிரண்டுபோன மேற்குலகுக்கு விளக்கம் சொன்னோம்.
அந்தப் பெரிய மனிதர்களுக்கு
இது புரியவேயில்லை.
குப்பையில் வீசுகின்றனர் எங்கள் குரலை.
ஈழத்தமிழரே! எதற்கும் அஞ்சாதீர்.
நாளை வாழ்வெமக்கு வசப்படும்.
எங்களைத் தடை செய்வதற்கு
இவர்கள் யார்?
எங்களுக்கு நுகத்தடி பூட்டுவதற்கு
இவர்கள் யார்?
சூரியக் குஞ்சுகளே துணிவை இழக்காதீர்
வேரையறுத்து எம்மை விறகாக்க முடியாது.
சபலங்கள் ஏதுமின்றி
தேரைச் சரியான திசைவழியிற் செலுத்துவோம்.
சத்தியம் தோற்றதாகச் சரித்திரம் கிடையாதே.
வியட்னாமை வெள்ளைமாளிகை தடைசெய்தது
ஹோசிமின் இடிந்துபோய் விடவில்லை.
தொடர்ந்தும் போராடினார்.
இன்று நிமிர்ந்து விட்டது அந்த நிலம்;
பாலஸ்தீனத்தைப் பயங்கரவாதிகளின் குகையென
வெள்ளைக்கார அரசுகள் விலாசமிட்டன.
இன்று அரபாத்துக்கு ஆலவட்டம் பிடிக்கின்றன.
இந்தியச் சுதந்திரப் போரைக் கூட
பிரிட்டன் பயங்கரவாதமென்று தானே
முதலில் பிரகடனம் செய்தது.
பின்னரென்ன நடந்தது?
மவுண்பேட்டனின் மனைவியின் தோளில்
காந்தியே கைபோட்டுத் திரிந்தார்;
நாங்களேன் இடிந்து போகவேண்டும்?
வரலாற்று நதி எங்கள் கால்நனைக்கவே வருகிறது;
வல்லமையுடன் இருப்போம்.
தந்ததை வாங்கித் தாள் பணிந்து கொள்வது
தேவானந்தனுக்கே தெரிந்த வித்தை;
விடுதலையை விற்று விருந்துண்ணுவதற்கு
வேறு யாராவது விருப்பப்படலாம்;
ஆனால் பிரபாகரன் தயாராக இல்லை;
போராடும் புலிகளுக்கும் பிரியமில்லை;
தாயகத் தமிழரும் தாங்கமாட்டார்கள்.
புலம்பெயர்ந்து போன பிள்ளைகள் கூட
பொறுக்க மாட்டார்கள்.
எமக்கு வேண்டும் உரிமை;
சலுகைகளல்ல..
அவர்கள் தரவிரும்பும் "அரசியற்பொதி"
அது ஆனைப்பசிக்குச் சோளன் பொரி.
ஆருக்கு வேண்டுமந்த "அரைச்சாப்பாடு."
உறக்கத்திற் கிடக்கும் உலகமே!
உனக்கொன்று உரத்துக் கூறுகிறோம்;
செவிட்டுக் காதுகளிருப்பின் தெரிந்து கொள்ளுங்கள்;
நாங்கள் இரத்தப் பிசாசுகள் அல்ல.
அடம்பிடித்தலறும் அடிப்படை வசதிகளுமல்ல.
நாங்கள் விடுதலைக்கு விலைகொடுக்கும் வேங்கைகள்.
அடங்கிப் போவதற்காகவா இந்தப்போராட்டம்
தொடங்கப்பட்டது?
இல்லையே.

பதினாறு வயதில் எமது தலைவன் புறப்பட்டது
பாதிவழியில் தன் பயணத்தை முடிக்கவல்ல;
உயிருரசி மூட்டியதல்லவா இந்த உரிமைப்போர்
இது கருகிப்போகாதெனச் சத்தியம் செய்கிறோம்.
சுதந்திரதேவி! உன்னைச் சேவித்தோம்.
மயிர் நீக்காத இந்த மான்கள்.
நீக்கும் நிலைவந்தால் நிச்சயம் வாழாது.
விண்மீது ஆணை,
இந்த மண்மீது ஆணை,
தாங்குமெம் தலைவன்மீது ஆணை,
தூங்குமெம் மாவீரச் செல்வங்கள் மீதாணை;
துணிந்துளது எம் தேசம்.
இனிப் பணிந்தெவர் காலையும் நக்காது
எம் நாவுகள்
பேச வருவோரே வாருங்கள்
உமக்கெமது பூமாலை.
குண்டுவீசவெனக் குறிவைப்பவர்களே
வாருங்கள்
உமக்கிது சாவோலை.

●

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com